# மாற்றம்

பயணம் : 01 தை - பங்குனி பாதை : 02

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.



தமிழ்த்தாய்மன்ற வெளியீடு ரூபா : 10/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்கள் சுவையான உணவை எங்கும் உண்ணலாம்! ஆனால் . . .

நாங்கள் உங்கள் உணவிற்கு மேலும் சுவையூட்டுகின்றோம். எமது நவீன சமையல் கலையகத்தில் உருவாகும் உணவு வகைகள் எம் மண்ணில் பாரம்பரிய மூலப்பொருட்களைக் கொண்டு தயாராகின்றன. ஒருமுறை எமது உணவகத்திற்கு விஜயம் செய்தால் உண்மை விளங்கும்.

### நிறைவான சேவை

சுத்தமான, சுவையான உணவு
நாங்கள் சொல்லவில்லை! நீங்களே வந்து
பரீட்சித்துப் பாருங்கள்.

வெளிநாட்டில் பயிற்சிபெற்ற உணவுத் தயாரிப்பாளர்களின் ஆலோசனைக்கேற்ப உணவு தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன.

இவை அனைத்தும் மனைக்கு வெளியே ஒரு
ஒரு மனையில் வழங்கப்படுகிறது.

எங்கே என்று அங்கலாய்க்கிறீர்களா?

ஜோ. எகட்டனின்
ஜெசித்தாரா உணவகத்தில் கிடைக்கும்.

ஜோ. எகட்டனின்

# ஜெசித்தாரா உணவகம்

19/3, கொழும்புத்துறை சாலை, சுண்டுக்குளி
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)

நம்பிக்கையின் மறு நாமம் — ஜெசித்தாரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றம்

மக்கள் சஞ்சிகை

பயணம் : 01 பாதை : 02

ஆசிரியர் :
யாதுழரான்

இணை ஆசிரியர்:
மல்லிகை மைந்தன்

பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்றம்
17 - 2 - 1993
யாழ்ப்பாணம்

தை — பங்குனி 1993

## மக்கள்

புரட்சிப்புயல் ஒன்று புறப்பட வேண்டிய நேரமிது - புரட்சிக்கு மாற்றம் அவசியம்.

மாற்றம் மக்கள் மத்தியில் ஏற்பட வேண்டியது

மக்கள் என்போர் வர்க்கப்பசி கொண்டவர் அல்ல லஞ்சம், ஊழல், செய்பவர்கள் அல்ல.

பாலியல் வெறி கொண்டோர், மனிதரை மனிதர் விழுங்குகின்ற கொள்ளைகளின்; உடைந்தையாளர்கள் மக்கள் அல்ல.

மக்கள் என்போர் மாண்பு மிகுந்தவர்கள் அவர்களிடம் லஞ்சம், பொறாமை, பஞ்சமா பாதகங்கள் இருக்காது.

'மாற்றம் மக்கள் சஞ்சிகை
மாற்றம் மக்களுக்கான சஞ்சிகை
மாற்றம் மக்களுக்காக மக்களால்
நடாத்தப்படுகின்ற சஞ்சிகை'

- ஆசிரியர்

வெளியீடு:
தமிழ்த்தாய் மன்றம்

தொடர்பு :
44/6, சங்கிலியன் வீதி,
நல்லூர்.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டைப்பட ஓவியர் :
மாற்கு

ஒற்றுரு :
ஆனந்தன்

விளம்பர அமைப்பு :
பே. ராஜவர்மன்
சோ. பிரகலாதன்

மன்ற ஆலோசகர் :
கலாநிதி க. கனகராசா

விநியோகம் :
மு. சுதாகரன்
கி. ஞானவதனி
இ. பேரின்பநாதன்
பி. யூலியஸ் பஸ்ரீன்
ஆர். முரளி
ஆ. பாலேஷ்வரன்
ம. கேதீஸ்வரன்
பா. பாலமுரளி

அச்சமைப்பு :
முல்லை அச்சகம்

பதிப்பாளர் :
பொற்கமலதேவி
பதிப்பகம்

பக்கங்கள் : 40

அடுத்த இதழ் :
1993 சித்திரையில்

தனிப்பிரதி :
ரூபா : 10.00

ஆண்டுச் சந்தா :
ரூபா : 35.00
(நான்கு இதழ்கள்)

# உள்ளே...

- மாற்றமும் விளைவுகளும்
- மலேரியா அறிகுறிகள்
- யப்பீஸ் மக்கள்
- குதிரைமுட்டை (சிறுவர்கதை)
- தொடர்மாடியின் அவலங்கள் (நேரடி றிப்போட்)
- அறிந்துகொள்ளுங்கள்
- மலரே மணக்காதே! (கவிதை)
- கப்பல் கவிழ்ந்தாலும்
- பொது அறிவுப்போட்டி : 02
- சிறகொடிந்த பறவைகள் (சிறுகதை)
- பேனா - நண்பர்கள்
- பிருந்தாவுடன் ஒரு செவ்வி
- சுவையான புதினங்கள்
- போட்டி முடிவுகள்
- ஊருக்கொரு சுந்தரி
- ஏன் அப்படி?
- புலவர் சிவா
- தேசாபிமானி யார்?
- சுருட்டியின் பதில்கள்
- வாசகர்கள் கடிதங்கள்
- குறுக்கெழுத்துப் போட்டி

வாசகர்களே !

மாற்றம் காலாண்டு மக்கள் சஞ்சிகை பற்றிய உங்களுடைய கருத்துகளையும் ஆக்கங்களையும் 44/6, சங்கிலியன் வீதி, நல்லூர் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரிக்கப்படும். கருத்துக்கள் கட்டுரையாளர்களது, எழுத்துக்கள் எழுத்தாளர்களது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றமும் விளைவும்

● அக்கரைச்சக்தி

இயற்கையின் நடைமுறையில் மாற்றம் என்பது ஒரு தவிர்க்க முடியாத அம்சமாகும். பிரபஞ்சம் தோன்றிய காலம்முதல் அது மாற்றமடைந்து கொண்டேவந்து இன்றைய நிலையை எய்தியுள்ளது. பிரபஞ்சத்தில் உள்ள மிகப் பெரிய தனிப்பொருட்கள் எனக்கொள்ளத்தக்க விண்மீன்கள் வெடித்துச் சிதறி, கோள்மண்டலங்களாக மாற்றப்படுகின்றன. அச் சிதறலினால் உண்டாகும், தூசுப்படலங்களின் ஈர்ப்பு விசை காரணமாக வால் நட்சத்திரங்கள் தோன்றுகின்றன. இவை, சூரியன் போன்ற வாயுக் கோளங்களை அண்மிக்கும்போது அவைகளை ஒரு குறிப்பிட்ட ஒழுங்கில் சில காலம் சுற்றிவந்து பின்னர் வானமண்டலத்தில் மறைந்துவிடுகின்றன. இதே போல நாம் காணும் சூரியனிலிருந்து கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் பிரிந்து வந்த எமது பூமியும் அது தோன்றிய காலத்தில் இருந்து வெவ்வேறு வகையான மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. இச் சூரியமண்டலத்தில், பூமியில் மட்டுமே தோன்றியிருக்கும் மனித இனமும் தோற்றத்திலும், இயல்பிலும் மாற்றமடைந்து வந்திருக்கிறது.

மனிதனும் இயற்கையின் ஒரு அங்கமாகையினால் இயற்கையில் ஏற்படும் மாற்றங்கள் மனிதனிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன இயற்கையின் மாற்றங்கள் அனைத்துக்கும், ஒரு பொருளின் அணுக்களின் கட்டமைப்புக் கூறுகளான இலத்திரன், புரோத்தன், நியூத்திரன் போன்றவற்றின் அதிர்வுகளே காரணமென்று நவீன விஞ்ஞான இயலில் கண்டறியப்பட்டுள்ளது இயற்கையை பொதுவாக உருவமுள்ள பொருட்களாகவும், உருவமற்ற சக்தியாகவும் இரண்டாகப் பகுக்கலாம். உண்மையில் பொருள் வேறு, சக்தி வேறு அல்ல. உறைந்த சக்தியே பொருளாக எமக்குத் தோற்றமளிக்கிறது. பொருளைச் சக்தியாகவும் சக்தியை பொருளாகவும் மாற்ற முடியும் என்பது விஞ்ஞானி ஐன்ஸ்ரீன் கண்டுபிடித்த பேருண்மையாகும். பொருளை சக்தியாக மாற்றுவதன் விளைவாக ஏற்படும் அபார ஆற்றலைப் பயன்படுத்தியே அணுவாயுதங்கள் செய்யப்பட்டுள்ளன. இவ் வாயுதங்கள் இரண்டாம் உலக மகாயுத்தத்தில் ஜப்பானிலுள்ள ஹிரோஷிமா, நாகசகி நகரங்களை நாசமாக்கியதோடு சுமார் இரண்டு லட்சம் மக்களின் உயிரையும் குடித்தன. சுமார் வருடங்களின் பின்பும் அணுகுண்டு போடப்பட்டதன் விளைவை அப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி மக்கள் அனுபவித்துக்கொண்டு வருகின்றனர். அதேவேளை பொருளை சக்தியாய் மாற்றும் நேரடிச் செயற்பாட்டை ஆறுதலாக்க அதன் விளைவு மனித குலத்திற்கு சாதகமாக அமைகின்றது. அணு உலை எனப்படும் கருவிகளில் இவ்வாறே பொருள் சக்திமாற்றத்தினால் ஆகும் வெப்பத்தைப் பயன்படுத்தி மின்சாரம் பெற்றுப் பெரும்பயனைப் பெற்று வருகின்றனர். எனவே ஒரு மாற்றமானது நல்லவிளைவையும், தீயவிளைவையும் தர முடியும். எது தேவை என்பதைப் பயன்படுத்தும் மனிதனே தீர்மானிக்க வேண்டும்.

உலகிலுள்ள உயிரினங்களுள் மனிதன் சிந்தனை ஆற்றல் உள்ளவன். ஏனையவை இயற்கையின் வழியே தோன்றி, வாழ்ந்து, மறைந்து விடுகின்றன. மனிதனோ தன் சிந்தனை ஆற்றலினால் இயற்கையையே மாற்ற வல்லவனாக இருக்கின்றான். இச் சிந்தனை தோன்றும் 'மனம்' எனப்படும் சூட்சுமப் பொருள் மூளையைக் கருவியாகக் கொண்டு செயலாற்றுகிறது. மூளையில் ஏற்படும் அதிர்வுகளே 'சிந்தனை'யாக வெளிப்படுகின்றன. ஆக்கத்திற்கும் அழிப்பதற்கும் அதிர்வுகளே மூல காரணமாக இருப்பதாலும், எல்லாவித மாற்றங்களையும் அதிர்வுகளே உண்டாக்குகின்றன என்பதாலும், மனிதனிடத்துள்ள சிந்தனையாற்றல் நன்மை தரும் வகையில் அமைவதற்கு, இயற்கையைச் சாதகமாய் மாற்றக் கூடியவிதமான அதிர்வுகளோடு அவனது சிந்தனைக்குரிய அதிர்வுகளும் ஒத்திசைக்க வேண்டும். இவ்வாறு ஒத்திசைவை ஏற்படுத்துவற்கு எவ்வாறு சிந்திக்க வேண்டும் என வலியுறுத்தி வழிநடத்தவே சமயங்கள், தத்துவங்கள், சாஸ்திரங்கள் என்பன தோன்றியுள்ளன. மனிதனது சிந்தனை ஒழுக்கம் தூய்மையானதாய் இருக்க வேண்டும் என்றே மதங்கள் யாவும் முரசறைகின்றன. ஒருவன் எந்த மதத்தையும் சாராதவனாக இருந்த பொழுதிலும் அவனது சிந்தனையொழுக்கம் தூய்மையானதாய் இருந்தாலொழிய அவனால் மனித குலத்திற்கும், சுற்றாடலுக்கும் நல்ல விளைவை ஏற்படுத்தக் கூடிய மாற்றமொன்றைக் கொண்டுவரமுடியாது.

எல்லாமனிதர்களும் ஒரேவிதமாய்ச்சிந்திக்க முடியாது. சிந்திப்பதுமில்லை. இதனால் தான் மனிதர்களிடையே போட்டி, பொறாமை, பூசல், போர் என்பன தோன்றுகின்றன. இவை நிச்சயமாக மனிதகுலத்திற்குப் பிரதிகூலமான விளைவுகளையே தருகின்றன. அனுகூலமான விளைவு ஏற்படவேண்டுமானால் ஒற்றுமை, அன்பு, பரஸ்பர நம்பிக்கை என்பன போன்ற நற்குணங்கள் வளரவேண்டும். இதற்கு ஒரு சிறுதொகை மதக் கூட்டத்தினராவது ஒரேவிதமாய் - நல்லவிதமாய்ச் சிந்திக்கப்பழக வேண்டும். அக்கூட்டத்தினரது சிந்தனையாற்றல்கள் அப்போது ஒன்று சேர்ந்து உருப்பெருக்குற்று நல்ல அதிர்வலைகளை ஏற்படுத்தி ஏனையவர்களின் சிந்தனைகளையும் தாக்கி அவர்களையும் நல்ல வழியில் சிந்திக்கத்தூண்டும். இதனால் கூடிய அளவு மக்கள்கூட்டத்தினர் நன்மை பெற இடமுண்டு. நல்ல விளைவை அனுபவிக்கவழியுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் இலட்சியத்தை வென்றெடுக்க வேண்டுமாயின் அவ்விலட்சியத்தைப் பற்றியும், அதை அடைவதால் ஏற்படும் மாற்றத்தின் நன்மையான விளைவுகள் பற்றியும் ஆழமாகச் சிந்தித்து மனமென்னும் சூட்சுமப் பொருளில் இலட்சியப் பற்றினை ஊற வைக்க வேண்டும். இலட்சியத்திற்காக நேரே பாடுபடுபவராக இல்லாதிருந்த போதும், இலட்சியத்திற்குரிய மக்களாய் இருப்பவர்கள் மாறுபாடான சிந்தனை உள்ளவர்களாக இருப்பின் அது நேரே பாடுபடுபவர்களையும், ஏனையவர்களையும் தாக்கி, இலட்சியத்தை அடைவதைப் பின்னோக்கித் தள்ளும். ஓர் இலட்சியம் சமாதான முறையினால் பெறப்பட வேண்டியதா போரினால் பெறப்பட வேண்டியதா என்பதை அம்மக்களின் சமூக, பொருளாதார, அரசியல் நிலைமைகள் சுட்டிக் காட்டும். சமாதானமான முறையில் இலட்சியம் வெல்லப்பட முடியாமற்போனால் போரினாலாவது இலட்சியம் அடையப்படவேண்டும். போரினால் அழிவு, பொருளாதாரச் சீர்குலைவு, பஞ்சம், நெருக்கடிகள் தோன்றுவது தவிர்க்க முடியாது. ஆனால் இவ்விதுன்ப நிகழ்வுகளே அம்மக்களின் சிந்தனையைத் தூண்டி புதிய வழிவகைகளைக் கண்டுபிடிக்கவும், போர்க்காலச் சூழ்நிலையைச் சாதகமாக்கவும் மேலும் இலட்சியத்தை நோக்கி முன்னேறவும் வழிசெய்யும். 'சிந்தனை' என்பதும் ஒரு அபாரமான சக்தியே. சக்தியை பொருளாக ஆக்க முடியுமெனில் சிந்தனையை நல்லதவிமாக மாற்றினால் உலகில் நிச்சயம் நன்மை பெருக்கலாம். நல்விளைவை அனுபவிக்கலாம்.

---

ஆங்கிலம் வளர்த்த விலங்குகள் : 01

## மமொத் (Mammoth)

The mammoth rally was held by the Tree Planting Association.

இதன் மொழி பெயர்ப்பு: மரம் நடும் இயக்கத்தினரால் ஒரு மாபெரும் (பிரமாண்டமான) கூட்டம் நடாத்தப்பட்டது.

இதில் 'மமொத் (mammoth)' என்றால் பிரமாண்டமான அல்லது மாபெரும் என்பதே கருத்து. இது எவ்வாறு வந்தது என உங்களுக்குத் தெரியுமா?

'மமொத்' என்பது ஒரு மிகப்பெரிய உருவத்தையும், நீண்ட மயிர்களையும், வளைந்த தந்தங்களையும் கொண்ட யானையின் உருவமான ஒரு விலங்காகும். இந்த விலங்கினம் 13 அடி உயரமுடையதாகும்.

இவ் விலங்கினம் 10,000 வருடங்களுக்கு முன்பே உலகில் அழிந்தொழிந்து போய்விட்டது.

ஆயினும், இவ் விலங்கின் பெயர் ஆங்கில மொழி வளர்ச்சிக்கு உதவியுள்ளது.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேரியா அறிகுறிகள்

மலேரியா என்பது குளிரையும் கடுமையான காய்ச்சலையும் ஏற்படுத்துகின்ற இரத்தத்தொற்று நோயாகும். மலேரியா நுளம்பு மூலமாய்ப் பரவுகிறது. மலேரியா நோய் உள்ளவருடைய இரத்தத்தில் இருக்கும் மலேரியா ஒட்டுண்ணியை நுளம்பு இரத்தத்தோடு சேர்த்து உறிஞ்சிவிட்டு அடுத்தவர்களுக்கு குத்தும்போது அவர்களுடைய உடலில் அவற்றைச் செலுத்துகின்றது. இதனாலே மலேரியா மக்களிடையே பரவுகின்றது.

★ குளிரோடும், பெரும்பாலும் தலைவலியோடும் ஆரம்பிக்கிறது. நோய் ஏற்பட்ட ஒருவர் 15 நிமிடங்களிலிருந்து 1 மணி நேரம் வரைகுளிரால் நடுங்குவார்.

★ குளிரைத்தொடர்ந்து $140^{0}$ F / $40^{0}$ C க்கு அதிகமாக காய்ச்சல் ஏற்படுகிறது. நோயாளி தளர்ந்தும், சிவந்தும், சிலசமயங்களில் பிதற்றிக்கொண்டும் இருப்பர். காய்ச்சல் பலமணிநேரம் நீடிக்கும்.

★ கடைசியாக நோயாளிக்கு வியர்க்க ஆரம்பித்து காய்ச்சல் தணிகிறது. இதன்பின் சற்று நேரம்வரை பலவீனமாகக் காணப்பட்டு பின்பு சாதாரணமாகவே காணப்படுவார்.

★ பெரும்பாலும் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு ஒருமுறை (மலேரியாவின் வகையைப் பொறுத்து) காய்ச்சல் ஏற்படுகிறது. ஆனால் ஆரம்பத்தில் தினமும் காய்ச்சல் ஏற்படலாம். மேலும் சிறு குழந்தைகளுக்கும் ஏற்கனவே மலேரியா வந்தவர்களுக்கும் காய்ச்சலின்போக்கு ஒரேமாதிரி இருப்பதில்லை. இதனால் காரணம் தெரியாத காய்ச்சல் யாருக்கு ஏற்பட்டாலும், குறிப்பாக மழை காலத்தில், அவருடைய இரத்தத்தைப் பரிசோதித்துப் பார்க்க வேண்டும்.

★ நாட்பட்ட மலேரியாவினால் பெரும்பாலும் மண்ணீரல் வீங்குகிறது. இரத்தச்சோகை ஏற்படுகிறது.

## மலேரியாவைத் தவிர்ப்பது எப்படி?

நுளம்புகளைத் தவிர்க்கவும். நுளம்பு இல்லாத இடத்தில் தூங்குங்கள் அல்லது தூங்கும் போது உடலைப்போர்த்திக் கொள்ளுங்கள்.

நுளம்புகளையும் அவற்றின் புழுக்களையும் அழியுங்கள். தண்ணீர் தேங்கிநிற்கும் குட்டைகள் பள்ளங்கள் ஆகியவற்றைத் தூர்த்துவிடுங்கள். பழைய தகரங்கள், உடைந்த பாத்திரங்கள் போன்றவற்றை அப்புறப்படுத்துங்கள். நுளம்புகள் பெருகும் குளம், குட்டைகளில் சிறிதளவு எண்ணெய்ப்படை ஊற்றிவிடுங்கள்.

ம. மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யப்பீஸ் மக்கள்

யா. ன்.

'கற் காசு நாடு' (Land of Stone Money) என்று தம் நாட்டு இலச்சினையில் பெருமையாகப் பொறித்துள்ள 'யப்' நாட்டு மக்கள் யப்பீஸ்' எனப்படுவர்.

சமீப காலத்தில் சுதந்திரம் பெற்ற இந்நாடு முன்பு ஸ்பானிய ஜேர்மன், யப்பானிய ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தமை அந் நாட்டு மக்களில் சிலரின் உருவ, நிற வேறுபாடுகளுக்குக் காரணமாகும். பொதுவாக இவர்கள் உருவம் குறைந்த சுருள் மயிர் கொண்ட 'மொங்கோலி' இன மக்கள் போன்ற முகத்தோற்றம் உடையோராவர் இவர்களின் மேனி நிறம் பொதுவாக இலங்கை மக்களினது போன்றதாகும். இவர்களின் பிரதான உணவு 'ராறோ' (Taro) எனப்படும் சேம்புக் கிழங்காகும். மீன், பன்றி இறைச்சி என்பவற்றுடன் இக் கிழங்கை உண்பர். இந்த 'ராறோ' பயிரிடுதல் உட்பட விவசாயம் பெண்களின் தொழிலாகும். ஆண்கள் மீன் பிடித்தலில் ஈடுபடுவர்.

இன்று இந்நாட்டு மக்கள் நவநாகரீக உடைகளை அணிகின்ற பொழுதிலும் தமது பண்பாட்டு உடையாக முன்பு உடுத்த உடைகளை அணிவதில் பெருமை கொள்கின்றனர். பெண்கள் இடுப்பிலிருந்து முழங்கால்வரை நீளமான புற்களாலான பாவாடையை அணிந்து, கழுத்தில் கறுப்பு நூலும் கட்டியிருப்பர். ஆண்கள் பருத்தித் துணியினால் கௌபீனம் கட்டி அதன்மேல் செவ்வரத்தம் மரப்பட்டைகளை முன்பக்கமும் பின்பக்கமும் தொங்கும்படி அணிந்திருப்பர். பருத்தி உடை பயன்படுத்த முன் மரவுரிகளை அணிந்ததை இது நினைவுறுத்தும். தற்காலத்தில் கிராமப்புற ஆண்கள் வெள்ளை, சிவப்பு, நீலநிறத் துணிகளை இடுப்பைச் சுற்றிச் சுற்றி ஆடையாக அணிவர்.

கழுத்திலும் தலையிலும் அழகான பல உருவ அமைப்புக்களில் செய்யப்படும் மலர் மாலைகளை அணிவது பெண், ஆண் இருபாலரதும் வழக்கம் பாடசாலை, அலுவலகங்களுக்குச் செல்வோரும் இவ்வாறு அணிந்து செல்வதைக் காணலாம். ஒருவரை வரவேற்க அணியும் மாலையைப் பெற்றவர் அதைக் கழற்றாது தொடர்ந்து போட்டிருப்பது வழக்கம். அதை உடன் கழற்றி விடுவது போட்டவரை அவமதிப்பது போலாகும் என்பது அவர்கள் கருத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமவாசிகளில் ஆண்கள் காதணி அணியும் பொழுது வலது காதுக்கு மட்டும் அணிவர். பெண்கள் இரு காதுகளுக்கும் காதணி அணிவர். மேலும் உடலை அழகுபடுத்த உடலில் பச்சை குத்தும் பழக்கம் முன்பு பெருமளவு இருந்தது. இன்றும் உண்டு.

இவர்களுக்கு கற்காசுகளைப்போல நிலமும் முக்கிய சொத்தாகும். நிலத்தின் பெயர் அந்நிலத்தின் உடமையாளருக்கு வைக்கப்படும். இதனால் ஒருவரின் பெயரைக்கொண்டு அவர் எக் கிராமத்தைச் சேர்ந்தவர் என அறியலாம். பெரும்பாலான மக்கள் இன்று கிறிஸ்தவர்களாக இருப்பதால் இவர்களின் பெயர் ஒரு யப்பீஸ் பெயரும் கிறிஸ்தவப் பெயரும் கொண்டதாயிருக்கும்.

கிறிஸ்தவமதம் இங்கு ஸ்பானியரால் பரப்பப்பட முன் இருந்த ஆதி மதம் மந்திரவித்தைத் தன்மை கொண்டதாக நோய்மாற்றத்தக்க மழை பெய்விக்கக்கூடிய மழையை நிற்பாட்டக்கூடிய தன்மையுடையது என்ப்படுகிறது. அம்மதத்தவர் யாரும் இன்று அங்கு இல்லை இன்று 'பஹாய் மதம்' மக்களிடையே விரைவாகப் பரவிவருகிறது.

எண்கோண வடிவ அடியைக் கொண்ட கூரான உச்சியுடைய ஓலைக் குடிசைகளை கிராமங்களில் இன்று காணலாம். கிராமங்கள் ஒவ்வொன்றிலும் 'ஆண்கள் இல்லம்' அமைக்கப்பட்டிருந்தன. இவையும் கூரான உச்சி கொண்டன. நவீன விமான நிலையக் கூரையும் இவ்வாறு கூரான உச்சி கொண்டதாகக் கட்டியுள்ளனர்.

குடும்பம் என்ற சமூகப் பிணைப்பு இவர்கள் வாழ்வில் முக்கிய அம்சமாகும். குடும்பத்தில் தந்தைக்கே முக்கிய இடம் அளிக்கப்படுகிறது. கிராமவாசிகள் குழுக்குழுக்களாக பிரதானிகள் தலைமையில் வாழ்கின்றனர். இவ்வாறு குழுக்களுக்கு இடையில் சண்டைகளும் ஏற்படுவதுண்டு. இன்றைய ஆட்சி முறையிலும் இப்பிரதானிகளுக்கு முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ளது. இம் மக்களிடையே சாதி வேறுபாடுகளும் உண்டு.

யப்பீஸ் எனப்படும் இவர்களின் மொழி வரிவடிவம் இல்லாத பேச்சு மொழியாக உள்ளது. ஆங்கில மொழியை ஆட்சி மொழியாகவும், கல்வி மொழியாகவும் கொண்டுள்ள இவர்களில் பெரும்பான்மையானோர் ஆங்கில அறிவுடையவர். இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின் அமெரிக்காவின் நம்பிக்கைப் பொறுப்பில் இந் நாடு இருந்தமையால் ஆங்கில மொழியை இவர்கள் அமெரிக்க மொழியெனக் குறிப்பிடுவர்.

யப்பீஸ் பிஞ்சுப் பாக்கையும் வெற்றிலையையும் சுண்ணாம்புத்தூளையும் கொண்டு வெற்றிலை போடும் பழக்கமுடையவர்கள். யாவருடனும் இவற்றைப் பகிர்ந்துண்ணும் விருப்பமுடையவர்கள் தேநீர் அருந்தாத இவர்களுக்கு இவ் வெற்றிலை அடிக்கடி போடுதல் வழக்கமாயுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்கதை

## குதிரை முட்டை

பரமார்த்தர் என்ற ஒரு குரு இருந்தார். அவருக்கு ஐந்துபேர் சீடர்களாக இருந்தனர். மட்டி, மடையன், பேதை, மிலேச்சன், மூடன் என்பன அவர்களின் பெயர்கள்.

ஒருநாள் அவர்களின் மடத்தில் இருந்த பசு ஒன்று காணமல்போய் விட்டது. அதைத் தேடிக்கொண்டு பக்கத்தில் உள்ள கிராமத்திலெல்லாம் தேடிப்பார்த்தனர். எங்கும் கிடைக்கவில்லை. அதில் ஒருவன் வரும் வழியில் ஓரிடத்தில் நான்கைந்து குதிரைகள் மேய்ந்து வருவதைப் பார்க்தான் அதற்கருகில் ஒரு குடியானவன் பூசணிக்காய்களை அறுத்து குவித்து வைத்திருந்தான். அந்தக் காய்களை குதிரை முட்டைகள் என்று நினைத்துவிட்டான் அவன்.

அதனால் குருவிடம் வந்து குருவே காணமல்போன பசு எங்கும் கிடைக்கவில்லை. ஆனால், வழியில் குதிரை முட்டைகளைப் பார்த்தேன். அவையாவும் பெரிது பெரிதாக இருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் குறைந்த விலைதான் பெறும் என்று சொன்னான். குரு மட்டி, மடையன் இருவரையும் குதிரை முட்டை வாங்கிவர அனுப்பி வைத்தார். அவர்கள் சென்ற பிறகு மூடன் குருவிடம், 'குருவே! நீங்கள் குதிரை முட்டை வாங்கிவரச் சொல்லிவிட்டீர்கள் அதை அடைகாப்பது யார்? அவை பெரிய பெரிய முட்டைகள் என்று சொல்கிறார்கள். கோழிகளை வைத்துக்கூட அடைக்க முடியாது போலிருக்கிறதே!' என்றுசொன்னான்

அதற்கு குரு, ''அதெல்லாம் பார்த்தால் எப்படி? உங்களில் ஒருவர் தான் அடைகாக்க வேண்டும்' என்றார். ஆனால் அங்கிருந்த சீடர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்குரிய வேலைகளைக் கூறிவிட்டனர். குரு உண்மைதான் உங்கள் ஐவருக்கும் இடைவிடாமல் வேலை இருக்கிறது. அதனால் இங்கு வேலையில்லாமல் சும்மா இருப்பவன் நான் ஒருவன் தான் அந்த முட்டையை என் மடியில் வைத்துக்கொண்டு கையால் தடவி, உடையால் மூடி அடைகாக்கின்றேன் எப்படியும் நமக்கு குதிரை இருந்தால் போதும்!' என்று அதற்குரிய வழிமுறைகளைக் கூறினார்.

மட்டியும் மடையனும் பூசனிக்காய் இருந்த இடத்திற்குச் சென்று அங்கிருந்த குடியானவனிடம், 'ஐயா இந்த குதிரை முட்டைகளில் ஒன்றையாவது எங்களுக்குத் தர வேண்டும்!' என்று கேட்டனர். இவர்கள் கூறியதைக் கேட்ட குடியானவன் இவர்களின் முட்டாள்த் தனத்தை புரிந்து கொண்டு, 'இவையெல்லாம் உயர்ந்த ஜாதி முட்டைகள் நூறு பொன் பெறும்' அவ்வளவு விலைகொடுத்து வாங்க உங்களால் முடியுமா!' என்று வினவினான்.

இருவரும் சாமர்த்தியமாகப் பேசுவதைப்போல் ''இதற்குமேல் உயர்ந்த ஜாதி முட்டைகளைப்பற்றி எங்களுக்குத் தெரியும். எங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏமாற்ற முடியாது. ஐந்து பொன்னுக்கு ஒரு முட்டையைக் கொடுக்கலாம்'' என்று தெரிந்தவர் போல் பேசினர்.

குடியானவன், 'உங்களைப்பார்த்தால் உயர்ந்த இடத்து ஆட்கள் போல் தெரிகிறது. பணம் முக்கியமில்லை. இந்த ஐந்து பொன்னுக்கு ஒரு முட்டையை நீங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். ஆனால் இவ்வளவு குறைந்த விலைக்கு வாங்கியதென்று வெளியில் யாரிடமும் சொல்லி விடாதீர்கள்' என்றான். அது போதுமென்று ஐந்து பொன்னை அவனிடம் கொடுத்து விட்டு அங்கிருந்தவற்றில் பெரிதாகப் பார்த்து ஒன்றை எடுத்துக்கொண்டனர்.

மட்டியின் தலைமேல் காயை சுமந்து செல்ல மடையன் முன்னே ஒய்யாரமாகத் தன் இடத்தை நோக்கிச்சென்று கொண்டிருந்தான் வழியில் இருவரும் தாங்கள் குறைந்த விலையில் பெரியமுட்டை வாங்கிய சாமர்த்தியத்தைப் பற்றி பேசியபடி நடந்தனர். அப்பொழுது ஒரு மரத்தின் கிளை தொங்கிக்கொண்டிருப்பதை கவனிக்காத மட்டி குறுக்கே சென்றான். கிளையில் சிக்கி பூசனிக்காய் கீழே விழுந்தது படாரென்று உடைந்தது.

இந்த சத்தத்தைக் கேட்டு அங்கு ஒரு புதரில் இருந்து ஒரு முயல் பாயந்தோடியது. அதை இருவரும் பார்த்து விட்டனர் 'அடடா! முட்டை உடைந்து குதிரைக்குட்டி ஓடுகிறதே!' என்று கூச்சலிட்டுக் கொண்டு அதைப்பிடிக்க ஓடினார்கள். அது மேடு, பள்ளம், புதர் போன்று பல விடங்களிலும் ஓடியது, இருவரும் அதைப்பிடிப்பதில் குறியாக இருந்ததினால் அவர்கள் உடை முள்ளில் சிக்கி தாறுமாறாக கிழிந்தது. கீழே தடக்கி விழுந்து எழுந்ததால் உடம்பெல்லாம் காயங்கள் இரத்தம் வடித்துக் கொண்டிருந்தது. அவர்கள் ஓடி, ஓடி கடைசியில் களைத்துவிட்டனர். அவர்களுக்கு ஏமாற்றமாகி விட்டது.

பசியும் சோர்வும் அவர்களை வாட்டியது. இனி குதிரைக் குட்டியைப் பிடிக்கமுடியாது என்பதைத் தெரிந்து கொண்டு தட்டுத்தடுமாறி மடத்திற்கு மயக்கமாய் வந்து விழுந்து விட்டனர். மற்றவர்கள் அவர்களைத்தேற்றி விழிக்கச்செய்தனர். 'நாங்கள் இவ்வளவு வேகமாகச் செல்லும் குதிரைக்குட்டியை பார்த்ததேயில்லை. எப்படிப்பட்ட அருமையான குதிரை தப்பிவிட்டது' என்று புலம்பினர். அவர்களுடைய வேதனையை கண்டகுருவுக்கு வருத்தமாக இருந்தது. இருந்தாலும் அவர்களிடம்.' அந்த குதிரைக்குட்டியிலேயே இவ்வளவு வேகமாகப் போகிறது என்று சொல்லுகிறீர்கள் வளர்ந்தால் இன்னும் எவ்வளவு வேகமாகச் செல்லுமே! நானோ வயதானவன் அந்தக் குதிரையின் மேலேறி சவாரி செய்ய என்னால் முடியுமா? அதே குதிரை கிடைத்தால்க்கூட எனக்கு வேண்டாம், என்று கூறி சமாதானப்படுத்தினார்.

[நன்றி: பரமார்த்த குருவின் கதைகள்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்மாடியின் அவலங்கள்

○ தர்ஷிகன்

யாழ். குடாநாட்டின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள கடற்கரைப்பிரதேசம் குருநகர். அங்கே வானத்தை வருடிக்கொண்டு கம்பீரமாக நிற்கும் அடுக்குமாடிக் கட்டிடங்கள். அதற்கு வடக்கு பக்கத்தில் சிறுவர் பூங்கா இருந்ததற்கான தடயங்களுடன் உள்ள நிலமும் அதனருகே அமைதியாக மழைநீர் தேங்கிநிற்கின்ற பள்ளமான விளையாட்டு மைதானம். கிழக்குப்புறத்தில் தீப்பெட்டிகளை அடுக்கி வைத்தாற்போல நெருக்கமான ஓலைக் குடிசைகள். மேற்குப் புறத்தில் அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட குடியேற்றத் திட்ட கல்வீடுகளும், அதற்கு இடை இடையே சிதறிக்கிடக்கும் ஓலைக் குடிசைகளும் தெற்குப்புறத்தில் கவிழ்த்துவிடப்பட்ட படகுகளை மடியிற் சுமந்த சோகமயமான கடற்பரப்பு. அதற்குஅப்பால் விட்டு விட்டு ஒலித்துக் கொண்டிருக்கும் துப்பாக்கி வேட்டுச்சத்தங்கள். இத்தனைக்கும் நடுவே மாடித் தொடர்களிலே அவல வாழ்க்கை தொடர்கிறது. ஆம், 1986 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 24-ம் திகதியிலிருந்து இற்றைவரை தொடர்கிறது.

தொடர்மாடிக் குடியேற்றத் திட்டத்தில் ஐந்து மாடிகளைக் கொண்ட எட்டுக் கட்டிடங்கள் திமிர்ந்து நிற்கின்றன. அங்கே 200 குடும்பங்கள் வறுமையின் வேதனையால் துவண்டு கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு வீட்டிற்கும் தண்ணீர், மலசல கூட, மின் விளக்கு வசதிகள் மின்சாரம் இருக்கும்போது இருந்தன. இன்று அனைத்தையும் இழந்த நிலையில் இருக்கின்றன. வறுமையின் கொடுமை அங்கே யாரையும் விட்டுவைக்கவில்லை. அனைவரிலும் வறுமையின் சின்னங்கள் ஆழமாகப் பதிக்கப்பட்டிருந்தன. குடியேற்ற வாசிகள் அனைவரும் கடற்றொழிலாளர்கள். இராணுவம் கடற்பரப்பை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதால் தொழிலை 75 சதவீதமானவர்கள் இழந்துள்ளனர். 'கொடிது கொடிது இளமையில் வறுமை' என்று முன்னோர்கள் கூறியது உண்மையே. சிறுவர்கள் அனேகர் நிர்வாணமாகவே உலாவுகின்றனர், பெண்கள் கூட சீராக உடலை மறைக்கக் கஷ்டப்படுகிறார்கள். கல்வியைப் பற்றிச் சிந்திக்கவே முடியாத நிலையில் வறுமைப் பிசாசு தாண்டவமாடுகிறது.

மாடிகளை நாம் வலம்வரும் போது நிர்வாணமாக வெள்ளத்தினுள் விளையாடும் சிறுவர் கூட்டம், கடற்கரை வீதிவழியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும்பி பிடிக்க ஓடித்திரியும் சிறுவர் கூட்டம், லொத்தர் போட்டு சம்பாதிக்கும் இளைஞர், தாயம், ஆடுபுலியாட்டம், காட்ஸ் என்பன விளையாடும் இளைஞர், கச்சான் விற்கும் குமரி, மாங்காய் விற்கும் கிழவி, இனிப்பு விற்கும் குடும்ப காரி, வலை பின்னும் யுவதிகள், குழாயடியில் சண்டைபுரியும் பெண்கள், விறகு கொத்திக் கொண்டிருக்கும் ஆண்கள், அரிசியிடிக்கும் தாய்மார்கள், மறைவிடங்களில் காதலில் களிப்புறும் ஜோடிகள் இப்படி எத்தனை எத்தனையோ காட்சிகள். அதற்கு அப்பாற் செல்ல வீதிவழியே நின்றும், இருந்தும் குழந்தைகளுக்கு பால் கொடுத்தபடியும், அடுத்தவர்களுக்கு பேன் எடுத்தபடியும் கதைத்துக் கொண்டிருக்கும் பெண்கள் கூட்டம் தங்கள் பொழுதை போக்கிக் கொண்டிருந்தனர்.

இன்னொருபுறத்தில் அருமையான காட்சியொன்று எம் கண்ணிற்பட்டது. இளங் கன்னியொருத்தி இரண்டாம் மாடியில் நின்றவாறே கரியால் பல் மினுக்கியவாறே துப்பலைக் கீழே துப்பினாள். துப்பல் நேராக கீழே சில்லிக்கோடு விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களின் தலைகளில் விழுந்தது. சிறுவர்கள் அதைப் பொருட்படுத்தாமல் விளையாடிக் கொண்டிருந்தார்கள். இன்னொரு கட்டிடத்தின் உச்ச மாடியில் ஒரு பெண் வீட்டுக்கழிவு நீரை 4-ம் மாடியில் நின்று ஊற்றினாள். கழிவு நீர் கீழே மாத்திரமல்லாது 2-ம் 3-ம் மாடிகளுக்குள்ளும் சென்றதைக் காணக் கூடியதாக இருந்தது.

இன்னொரு கட்டிடத்திற்கு அருகில் நாம் செல்லும் வேளையில் பெண்கள் கூட்டமொன்று அரிசியிடித்துக்கொண்டு நின்றது. ஒரு பெண் எம்மைப் பார்த்து 'அரிசி இடிக்க விறகு கொத்த, தண்ணீர் எடுக்க, மலசலங்கழிக்க இன்னும் ஒழுங்காகச் சொல்லப்போனால் அனைத்துக்கும் கீழே இறங்கி ஏற பெரிய கஷ்டம் தம்பி' என்றாள். இன்னொருத்தி ''கீழேயிருந்து மாடிக்குத் தண்ணீர் கொண்டு போறதில எங்கட நாரி முறிஞ்சு போம்'' என்றாள். இன்னொருத்தி ''உடுப்புத்தோய்த்துக் காயப் போடவோ சைக்கிள் பாதுகாப்பாக விடுவதற்கோ இடமில்லை. இப்படியான நெருக்கடிகள் உள்ள போது மழை பெய்துவிட்டால் அதைப்போல அருவருப்பு இல்லை'' என்று சொல்லிக் கவலைப்பட்டாள்.

கடற்கரைப் பிரதேசமாகச் சென்றோம். அங்கே சிறியவர்களும் பெரியவர்களும் வெட்கம் விட்டெறிந்து மலங்கழிப்பதைப் பார்க்கக் கூடியதாக இருந்தது. அந்தத் துர்நாற்றத்தைப் பொருட்படுத்தாமல் பல சிறுவர்கள் கடற்கரையில் விளையாடித் திரிகின்றனர். அவர்களில் ஒருவனை அழைத்தோம். அவன் பெயர் ரிகன். அவன் கூறுகையில் ''எனது அப்பா குயின்சஸ் - கடலுக்குத் தொழிலுக்கு சென்றபோது ஆமிக்காரனால் பிடிக்கப்பட்டு பலாலியில் அடைக்கப்பட்டிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதால வீட்டில கஷ்டம். எங்களுக்கு சாப்பாட்டுக்கு சித்திதான் காசுதாறவ'' என்றான்.

மாடிப்பக்கமாக எனது பார்வையைத் திருப்பினேன். மூன்றாம் மாடியிலே ஒரு பெண் கடற்கரையை நோக்கி கைகைகாட்டிக் கொண்டுநின்றாள். கடற்கரையிலே ஒரு இளைஞன் நின்று அவளைப்பார்த்து கைகை காட்டினான். அந்த இளைஞனை அணுகினேன். அவன் பெயர் யாக்கோபு ரமேஷ். வயது இருபத்தி நான்கு கடற்றொழில் செய்பவன். தான் அந்தப் பெண்ணைக் காதலிப்பதாக ஒளிவு மறைவு இல்லாமல் கூறினான். சிரித்தவாறே என்னுடைய வயது திருமண வயதைத் தாண்டிவிட்டது'. என்றான்.

ரமேஷ்டன் மாடிகள் அருகால் நடந்து வந்தோம். ஒரு பெண்ணை அவர் சுட்டிக் காட்டினான். அவள் பெயர் ஷர்மிளியாம் பதினெட்டு வயது ஆனால் விதவை. ஷர்மிளி சுரேஷ் எனும் ஒரு கடற்றொழிலாளியை எட்டு மாதத்திற்கு முன் திருமணம் முடித்தாளாம். சுரேஷ் கடற்றொழிலுக்குச் செல்லும் போது இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டினால் தலைசிதறி கடந்த நவம்பர் மாதம் 20-ம் திகதி இறந்துவிட்டானாம். அவளது வயிற்றிலே குழந்தை வளருகிறதாம். அவளது வாழ்க்கை அனர்த்தங்களைச் சொல்லி பெருமூச்சு விட்டான் சுரேஷ்.

பெரியதம்பி தேவதாஸ் 51 வயது ஐந்து பிள்ளைகளின் தந்தை வலது கரத்தை இழந்துள்ளவர். அவரை நாம் அணுகிய போது ''சாதியை அடிப்படையாகக் கொண்ட சமுதாயக் கொடுமைகளினாலும், பொருளாதாரக் கஷ்டங்களினாலுமே எங்களுடைய தொடர்மாடிச் சமுதாயம் மேலும் மேலும் பின் தள்ளப்படுவதற்கு காரணமாக இருக்கின்றது.'' என்றார். அவருடைய பேச்சிலிருந்து தாங்கள் இந்த சமுதாயக்கோட்பாடுகளால் நசுக்கப்பட்டுவருகின்றோமே என்ற ஆதங்கம் வெளிப்பட்டுக் கொண்டிருப்பதை உணர முடிந்தது. தொடர் மாடிகளுக்கு நடுவே அமைந்துள்ள சனசமூக

## விவாத மேடை

வாசகர்களே!

### 'சமூகம் ஒரு கொடிய பிசாசைப் போன்றது'

இதற்கு ஆதரவானது அன்றி எதிரான கருத்துக் கட்டுரைகளை எதிர்பார்க்கின்றோம். குறித்த விவாதத்துக்கான கட்டுரையைத் தாளின் ஒரு பக்கத்துக்கு எழுதி அனுப்புங்கள். அது 'மாற்றம்' சஞ்சிகையின் ஒரு பக்கத்திற்குள் அடங்கக் கூடியதாக அமைய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையத்தின் தலைவர் செபமாலை அழகரட்ணம், செயலாளர் சந்தோனிப்பிள்ளை ஏனஸ் ஏஸ்போரையும் சந்தித்து தொடர் மாடிச் சமுதாய நிலவரங்களை அறிந்துகொண்டோம். பின்னர் கர்த்தர் கோவிலில் தீபமேற்றிக்கொண்டிருந்த குடும்பத் தலைவி திருமதி அரசு பவளராணியை சந்தித்த போது அவர் 'எங்கட வாழ்க்கை ஏனோதானோ என்றுதான் நடக்குது' என்றார். அவரது கவலை பின்னர் புரிந்தது. நோயாளிகளாகவும் குடிகாரராகவும் விளங்கும் குடும்பத் தலைவர்கள் வேலையில்லாது வீட்டிலேயே இருக்கிறார்கள் இந்த நிலையிலும் அங்கே பல குடும்பங்கள்.

மணற் தரையிலே வெட்டப்பட்டிருந்த பதுங்குகுழிகள் நுளம்புகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளாக இருக்கின்றன. இதனால் மலேரியா போன்ற தொற்று நோய்கள் அதிகமாகக் காணப்படுகின்றன.

அந்திநேரம் சூரியச்சிவப்புவிளக்கின் ஒளிக்கீறல்கள் தொடர் மாடிப் பிரதேசத்தை சிவப்பாக்கிக் கொண்டிருந்தது கடற்றொழிலுக்கு ஆடவர்கள் வலைகளையும். பறிகளையும் தோள்களிலே சுமந்து கொண்டு கர்த்தரை நினைத்தவாறே கடலுக்குச் செல்லுகின்றனர் பெண்கள் மாடிகளில் நின்றவாறே இரங்கிக் கொண்டிருந்தார்கள். இது வழமையான நெய்தல்நிலக் காட்சிதான். இலக்கியங்களில் குடிசைகள் தென்படும் ஆனால் இங்கே மாடிகள் தென்படுகின்றன. அவ்வளவுதான் அவர்களுடைய துயர வாழ்க்கையில் எத்தகைய மாற்றமும் ஏற்பட்டிருக்கவில்லை. உலக நிர்வாணத்தை இருளாடை மூடத் தொடங்கியது. நாமும் மாடி வீட்டு ஏழைகளின் அவலத்தை அறிந்துகொண்டு எமது நேரடி ரிப்போட்டை முடித்துக்கொண்டு புறப்பட்டோம் ★

### புகழ்மிகு வாசகம்

'ABLE WAS I ERE I SAW ELBA' என்பது மாவீரன் நெப்போலியன் சொன்ன புகழ்மிகு வாசகம். இந்த வாசகத்தைத் தலைகீழாக வாசித்தாலும் அதே அர்த்தம்தான் வரும்.

கி. சு. கி.

### சமிக்ஞை

திபெத் நாட்டில் விருந்தாளி ஒருவரது வீட்டில்தங்கி விடைபெற்றுச் செல்லும்போது வீட்டுக்காரர் தம் நாக்கை வெளியே நீட்டிக் காட்டுவார். 'நீங்கள் இங்கிருந்தபோது உங்கள் பேச்சை நான் ரசித்தேன்' என்பது இதன் பொருளாம்.

எஸ். எஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகம் பிரிவு
மாநகர நூலகம் சேவை
யாழ்ப்பாணம்



# அறிந்துகொள்ளுங்கள்

தொகுப்பு: இ செல்மர் எமில்

- எல்லாத் தாவரங்களும் இரவு நேரத்தில் காபனீரொட்சைட்டுவாயுவை வெளிவிடுகின்றன. பகலில் ஒட்சிசன் வாயுவை வெளிவிடுகின்றன. ஆனால் துளசியும், அரசமரமும் இரவு நேரங்களிலும் ஒட்சிசனை வெளிவிடுகின்றனவாம்.
- பிரான்ஸ் நாட்டில் பெற்றோலை எவ்வாறு அழைக்கின்றார்கள் தெரியுமா? 'எசன்ஸ்' [Essence] என்று. அங்கு போய் பெற்றோல் என்று கேட்டால் அவர்களுக்கு விளங்காது.
- கிரீன்லாந்து 8.4 லட்சம் சதுர மைல் பரப்பளவைக் கொண்டது. ஆனாலும் இவ்வளவு பெரியபரப்பில் வாழும் மக்கள் தொகை எவ்வளவு தெரியுமா? 30,000 தான். இதற்கு காரணம் 4/5 பங்கு நிலம் எப்பொழுதும் பனியினால் மூடப்பட்டடிருப்பதே ஆகும்.
- சாதாரண பாமர மக்களை கிரேக்க மொழியில் 'Demos' என்று அழைப்பார்கள். இதிலிருந்து தான் 'Democracy' [ஜனநாயகம்] என்று சொல் உருவாகியது.
- உலகில் சுமார் 30 லட்சம் இளைஞர்களுக்கு மேல் தபால் தலை சேகரிப்பதைப் பொழுது போக்காகக் கொண்டுள்ளனர். இது இளைஞர்களுக்கு மட்டும் அல்ல பெரிய தலைவர்களுக்கு கூட உண்டு. இங்கிலாந்தின் ஐந்தாம் ஜோர்ஜ் மன்னன், அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டு ஆகியோரும் முத்திரை சேகரித்தார்களாம்.
- சதுர, செவ்வக, மற்றும் வட்டவடிவ தபால் தலைகளை தான் நாம் இதுவரை கண்டுள்ளோம். ஆனால் 1974இல் டோங்கா நாடு வாழைப்பழ வடிவிலும் ஒரு முத்திரையை வெளியிட்டுள்ளதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலையில் விழும் கல்!

ஒருவன் ஒரு மதத் தலைவரைச் சந்தித்துக் கேட்டான். 'நான் பேரீச்சம் பழங்களைச் சாப்பிட்டால் மதக்கோட்பாடுகளைப் புறக்கணித்தவனாக ஆவேனா?'

'இல்லை' எனப்பதில் வந்தது மதத்தலைவரிடமிருந்து.

'மேற்கொண்டு சிறிது நீரை உட்கொண்டால்......?'

'அதுவும் புறம்பான தல்ல!'

'அதற்கு மேலும் சிறிது காப்பி (ஈஸ்ட்) யைக் குடிக்கிறேனென்றால்)'?

'அதில் ஒன்றும் தவறில்லையே?

'சரி! பேரிச்சம்பழ மது இம்மூன்று பொருட்களால் செய்யப்பட்டதுதானே, பின் ஏன் மதுவை மட்டும் உட்கொள்ளத் தடை இருக்கிறது?'

மதத் தலைவர் கூறினார்: கையளவு மண்ணை எடுத்து உன் தலையில்போட்டால் உனக்கு வலி எடுக்குமா?'

'ஒருபோதுமில்லை' மனிதன் கூறினான்.

'அதன்மேல் நீரைக்கொட்டினால்'

'அப்போதும் வலி ஏற்படாது' என்றான்.

'சரி மண்ணையும் நீரையும் கலந்து செங்கல்லாக மாற்றி உன் தலைக்கு எறிந்தால் உனக்கு எப்படி இருக்கும்?'

'என் தலையைப் பிளக்கும்'

சரியாகச் சொன்னாய்! உன் கேள்விக்குச் சரியான பதில் கிடைத்து விட்டது?'

(நன்றி: யுவபாரதி)

## மலரே மணக்காதே!

மலரே நீ மணக்காதே!
மற்றவரை இழுக்காதே!
தேனைச் சுரக்காதே!
தேனீயை அழைக்காதே!
மொட்டே மலராதே!
மொய்க்கும் வண்டை
அழைக்காதே!
அழகாக நீ மலர
தென்றல் வந்து உனைவருட
கரும்பாறை தான் பிளந்து
சுனையாக ஓடிவர
இதமான சூழலிலே
இன்பத்தைக் கூட்டிவா
வண்டுகளும் உனைத் தேடி
ஓடோடி வந்துவிட
உன்னழகில் அதுமயங்கி
தனைமறந்து கற்பழிக்க
மகரந்தச் சேர்க்கையினால்
அழகிதழ்கள் அவிழ்ந்துவீழ
அசிங்கமாய் நீ தோன்ற
கருவண்டு பாராமல் ஓடிவிடும்
எதனால் உனக்கு இக்கதி
அழகாக இருந்து கொண்டு
அமுதத்தை சுரந்து' கொண்டு
மணப்பதால்த் தானே!
மலரே நீ மணக்காதே!
மற்றவரை இழுக்காதே!

— சுதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பல் கவிழ்ந்தாலும்...

சிவதுஷ்யந்தன்

முன்னொரு காலத்தில் மன்னன் ஒருவன் இருந்தான். அவன் சேவகன் ஒருவனை அழைத்து கப்பல் வந்து விட்டதா? எனப்பார்த்து வா அனுப்பினான் சேவகனும் சென்று கப்பல் வந்ததைப் பார்த்து வந்தான்.

அப்போது அரசன், 'கப்பல் வந்து விட்டதா?' என்று கேட்டான்.

'ஆம் அரசே' என்றான் சேவகன். 'அதில் என்னென்ன பொருள் வந்துள்ளது?' என்று கேட்டான் அரசன். அதற்கு சேவகன் 'நான் கப்பல் வந்ததைத் தான் பார்த்து வந்தேன் அரசே! அதில் என்ன வந்தது என்று பார்க்கவில்லை, என்றான்.

பின்பு ஒருநாள் சேவகனின் மதிநுட்பத்தினை அறிய எண்ணிய அரசன் சுவாமியார் வேடந்தரித்து விசுவாசம் மிக்க, நம்பிக்கைக்கு பாத்திரமான அந்த கப்பல் பார்த்த சேவகனை அண்டி 'கப்பல் கவிழ்ந்தாலும் கன்னத்தில் கைவையாது இருக்கும்படி உன் அரசனைப் பார்த்துக் கொள்' என்றார்.

சேவகனும் 'ஆம் சுவாமி அப்படியே செய்கிறேன்' என்று பணிந்தான்.

மறு நாள் காலை, சுவாமியார் சொன்னது போன்று மன்னன் கன்னத்தில் கைவைத்து அமர்ந்திருந்தான். அதைக்கண்ட சேவகனுக்கு சுவாமியார் கூறியது ஞாபகம் வந்தது. ஆனால் மன்னனுக்குத் தவறான அறிவுரையைச் சொன்னால், தன் தலை போகும் என்று அஞ்சி முதலில் தயங்கினான். பின்னர் சுவாமியார் சொன்னது தானே, பிழையானதாக இருக்கமுடியாது என்ற அசட்டுத் துணிவுடன் 'மன்னா! கப்பல் கவிழ்ந்தாலும் கன்னத்தில் கைவைக்கக் கூடாது' என்றான்.

மன்னன் எழுந்து, 'கப்பல் பார்த்த சேவகா! இங்கே வா' என அழைத்து, 'கப்பல் கவிழ்ந்து ஒருவர் ஏழ்மை நிலையை அடைந்தாலும் கன்னக்கோலில் கைவைக்காதே! (களவு எடுக்காதே) என்பது தான் பழமொழியின் பொருள் அதை' நீ தவறாக புரிந்து கொண்டாய்' என்றான்.

'அரசே! நான் செய்த பிழையை மன்னித்துக் கொள்ளுங்கள்' என்றான் சேவகன்.

'நான் தான் சுவாமியார் வேடம் பூண்டு உன் மதி நுட்பத்தை அறிய இப்படி ஒரு திருவிளையாடல் செய்தேன். மதிநுட்பம் இல்லாத நீ எங்காது ஓடிப்போய்ப் பிழைத்துக்கொள்' என்று ஆணையிட்டான் மன்னன்.

'கப்பல் கவிழ்ந்தாலும் கன்னத்தில் கைவையாதே!'

கன்னம் — கன்னக்கோல், களவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவுப் போட்டி : 02

1. தமிழிலே பல கலைகளுக்கும் நூல்கள் தோன்றின. ஆனால் அவை காலத்தால் அழிந்துவிட்டன. இதேபோலவே பல முத்தமிழ் நூல்களும் அழிந்துபோயின. ஆயினும் ஒரு முத்தமிழ்க் காப்பியம் மாத்திரம் இன்னும் தமிழிலே நின்று நிலவுகிறது. அது எது?
2. தமிழிசைக் கலையினைப் பற்றி ஆராய்ந்து ஒரு சரித்திரப் புகழ் பெற்ற நூலை இயற்றினார் ஒரு ஈழத்துறவி. ஈசன் உவக்கும் இன்மலர் மூன்றினைப்பற்றியும் கங்கையில் விடுத்த ஓலையையும் தமிழ் உலகத்திற்குத் தந்த அத்துறவி யார்? அவரின் இசை நூலின் பெயர் என்ன?
3. கால் நூற்றாண்டுக்கு மேலாக சிறையில் இருந்த உலகப் புகழ் பெற்ற ஒரு தென்னாபிரிக்கக் கறுப்பினப் போராளி சில ஆண்டுகளுக்கு முன் விடுவிக்கப்பட்டார் 'கறுப்புச்சிங்கம்' எனப்பட்ட அவரின் பெயர் என்ன?
4. ஜீவசேவையே 'சிவபூசை' என்பதை தாரக மந்திரமாகக் கொண்டு இயங்கும் 'மிஷன்' எது? அதைத் தாபித்தவர் யார்?
5. நவீன ஒலிம்பிக் விளையாட்டுக்கள் 1896ம் ஆண்டு ஆரம்பமாகின. இதன் நூறாவது ஆண்டு நடைபெறும் போட்டிகள் 1996ம் ஆண்டு எங்கு நிகழவுள்ளன?

நன்றி : தமிழ்த் தாய் மன்றம்

(உங்கள் விடைகளை 10 - 03 - 1993க்கு முன்னர் கிடைக்க கூடியவாறு அனுப்பி வையுங்கள். சான்றிதழ்கள் வழங்கப்படும்)

## பொது அறிவுப் போட்டி: 01 க்கான விடைகள்:

(1) உடுவில் மகளிர் கல்லூரி (2) மட்டுநகர் (3) அண்ணன் சிவகுமாரன் (4) சேதுநாணயம் (5) ஆழிக்குமரன் ஆனந்தன் (6) 1981 ஆம் ஆண்டு (7) பண்டாரவன்னியன் (8) கிளித்தட்டு. கிட்டிப்புள்... (9) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் (10) பக்திமொழி.

## சான்றிதழ் பெறுவர்கள்:

(1) த. ஹரிப்பிரியா, யா / வேம்படி மகளிர் கல்லூரி (2) பு. செந்தில்ரூபன் இல. 315, நாவலர் வீதி (3) செல்வி. சந்திரிகா இமானுவல், இல. 842, ஆஸ்பத்திரி வீதி (4) நா. ஜெயக்குமார் தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை (15) மு. நிறைஞ்சனா, ஞானப்பிரகாசர் வீதி, உடுவில்(6) நா. தரணிதரண். யா. இ. க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறகொடிந்த பறவைகள்

● க. டர்ஷிக்கா

குழந்தைக்கு இரண்டு நாட்களாக காய்ச்சல் உடம்பு அலலாக கொதித்துக் கொண்டிருந்தது அழக்கூடத் திராணியற்று அனுங்கிக்கொண்டிருந்த அதனை பார்க்க பரிதாபமாக இருந்தது அவனுக்கு. வாடிய கொடிபோல் வற்றிப் போயிருந்த அதனை வேதனையுடன் தூக்கிக்கொண்டு வாசலுக்கு வந்தான். முதல் நாள் காலை குழந்தையை ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றபோது, டாக்டர் இல்லை மத்தியானதின் மேல்தான் வந்து மருந்து எழுதிக் கொடுத்தார். அந்த மருந்து ஆஸ்பத்திரியில் இல்லையாம். வெளியில்தான் வேண்ட வேண்டும். என்று சொல்லியிருந்தார். அவரைக் குறை சொல்லிப் பிரயோசனமில்லை தொடர்ந்து நடக்கும் பிரச்சினைகளால் மருந்துகள் வரத்தில்லை. ஆஸ்பத்திரி ஊழியர்களும் ஒழுங்காக வருவதில்லை. 'எந்த நேரம் என்ன நடக்குமோ என்ற வேதனையுடனும், பயத்துடனும் காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கும்போது எந்த ஒழுங்கை எதிர்பார்ப்பது' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். அவனிடம் கையில் காசு இல்லை. இருந்திருந்தால் நேற்றே போய் வாங்கி வந்திருப்பான். தெரிந்தவர்களும் எவ்வளவு நாட்கள்தான் கடன் தருவார்கள்? இனி யாரிடமும் கையேந்துவதில்லை. என்ற வைராக்கியமும் சில காலமாக அவன் மனதில் முளைந்திருந்தது.

இன்று யாழ்ப்பாணத்துக்குப் போய் எப்படியாவது மருந்து வாங்கிவர வேண்டும்' என்று தீர்மானித்துக் கொண்டவன், குழந்தையை கொண்டு வந்து ஏணையில் போட்டான். அந்த வருத்தத்திலும் அது இலேசாகச் சிரித்தது. ஒட்டி உலர்ந்துபோன அதன் கன்னங்களை வருடிக் கொடுத்தவன், தன் குழந்தையை குண்டுக் கன்னங்களுடனும், தளுதளுத்த உடலுடனும் கற்பனை செய்து பார்த்தான் சந்தோஷமாக இருந்தது. 'அப்பாவுக்கு வேலை கிடைக்கட்டும், பாலும் முட்டையும் வேண்டித் தருகிறேன்' என்று அதனிடம் சொன்னான். அப்பா சாப்பாடு...' என்று கொண்டே, அவனுடைய ஆறு வயது பெண் குழந்தை அவன் பின்னால் நின்றிருந்தாள். பள்ளிச் சீருடையும் புத்தகப் பையுமாக நின்ற அவளிடம் 'அப்பா டவுணுக்குப் போக வேணும், தம்பிக்கும் சுகமில்லை...

## சிறுகதை

நீ இண்டைக்கு பள்ளிக்குப் போக வேண்டாம். வீட்டிலை நிண்டு தம்பியைக் கவனமாகப் பார்த்துக்கொள்' என்றான். அவள் மௌனமாகப் புத்தகப் பையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துவிட்டு உடையைமாற்றிக் கொள்ள உள்ளே போனான் அவளிடம் வயதுக்கு மீறிய அறிவு முதிர்ச்சி தென்படுவதை இவன் சமீப காலங்களாக கவனித்து வருகிறான். ஆம் சூழ்நிலைக்கேற்ப அவள் அனுசரித்து நடப்பதைக் கண்டு இவன் பெருமையும்... அதே சமயம் வேதனையும் கொண்டிருக்கிறான். அந்த ஆறு வயதுச் சிறுமியின் தலையில் எத்தனை பொறுப்புகள் சுமத்தப்பட்டிருக்கின்றன என நினைக்கும் போது அவனால் விதியை நொந்து கொள்ளாமல் இருக்க முடியவில்லை.

குழந்தைக்குக் கஞ்சி காய்ச்சி ஆறவைத்தான். பிறகு மகளைக் கூப்பிட்டு 'கஞ்சி காய்ச்சி வச்சிருக்கிறன். தம்பி அழுதால் கவனமாகக் குடுக்க வேணும்...' என்று சொன்னான். மௌனமாக அவன் சொல்வதற்கு தலையாட்டிய அவளிடம் 'நீயும் சாப்பிடு அனு...' என்று கூறி அவளுக்கு சாப்பாடு போட்டுக் கொடுத்தான்

பின் பக்கத்து அறைக் கதவை திறந்து கொண்டு உள்ளே வந்தான். வழக்கம் போல் தன் வெறித்த பார்வையை யன்னலுக்கு வெளியே வீசிக் கொண்டிருந்த அவனுடைய மனைவி ராதா... அவன் வந்ததையே உணராமல் கட்டிலில் அமர்ந்திருந்தாள். இவன் மௌனமாக, சீப்பை எடுத்து அவள் தலையை வார ஆரம்பித்தான். பொறுமையாகச் சிக்கெடுத்துப் பின்னிக் கட்டினான். 'முழுகி ஒரு கிழமை ஆகுது... நாளைக்கு முழுகவாக்கவேணும்.' என்று தனக்குள் நினைத்துக் கொண்டவன், அவள் கையைப் பற்றி வெளியே அழைத்து வந்து முகம் கழுவச் செய்து... உடைமாற்றி விட்டு... உணவு ஊட்டத் தொடங்கினான். ஒரு குழந்தையைக் கவனிப்பது போல் அவளைக் கவனித்தான். ராதாவும் அவனுக்கு ஒரு குழந்தைதான். அவளுடன் சேர்த்து அவனுக்கு மூன்று குழந்தைகள் ... அவனையே ஒரு வெளிச்சமாக எதிர்பார்த்து நிற்கும் குழந்தைகள். உலகமே அறியாத அவனைத்தவிர தம்மைக் கவனிக்க யாருமே இல்லாத அனாதைக் குழந்தைகள்.


# கீன் கல்வி நிலையம்

பலாலி வீதி, திருநெல்வேலி

## ஆண்டு 4 முதல் O/L வரை

கலை, வர்த்தகம் A/L வகுப்புகள் நடைபெறுகின்றன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.



அவனுக்கு ஏனோ மனதில் பாரம் அழுத்தியது. கண்ணில் நீர் நிரம்பியது. 'ராதா... ராதம்மா சாப்பிடு' அவன் பரிவுடன் சொன்னான். ராதா தன் வெறித்த பார்வையை மாற்றாமலே சாப்பிட்டாள். அவளுடைய மெலிந்த உடலையும்... எலும்பு துருத்திய கன்னங்களையும் பார்த்த அவனுக்கு. ஒரு காலத்தில் தன்னை ராதா தன் அழகால் மயக்கியது நினைவில் வந்தது. தன் அன்பால் அவனைத் தன் பின்னால் தொடரச் செய்த ராதா 'கோபால் கோபால்' என்று கொஞ்சி அவனைச் சிந்தை தடுமாறச்செய்த ராதா இதோ எல்லாவற்றையும் இழந்து பிரமை பிடித்தவளாக.. பேச்சை மறந்தவளாக உலாவுகின்றாள் அந்த நினைவு அவன் நெஞ்சை கசக்கி பிழிந்தது...

எட்டுவருடங்களின் முன் அவன் ராதாவை முதன் முதலில் சந்தித்த போது அவள் எவ்வளவு அழகாக இருந்தாள் அவள் புன்னகை செய்த போதெல்லாம் இவன் தன்னை மறந்திருக்கிறான். அப்போதெல்லாம் அவன் கனவு நனவு எல்லாவற்றிலுமே ராதா இருப்பாள். வெளியூரில் 'தனியார் நிறுவனம்' ஒன்றில் வேலை பார்த்துக் கொண்டிருந்த அவன் கிழமை லீவில் யாழ்ப்பாணம் வந்தபோதுதான், பக்கத்து வீட்டுக்கு புதிதாக வந்திருக்கும் ஏழை வாத்தியாரின் ஒரே பெண்ணான ராதாவை சந்தித்தான். பார்த்த மாத்திரத்திலேயே ராதா அவனை கவர்ந்துவிட இரண்டுவார லீவு மூன்று வார லீவாக நீடிக்க இவன் இறுதியில் அவளைப் பிரிய மனமில்லாமலே போய்ச் சேர்ந்தான். அதன் பிறகு அவனுடைய யாழ்ப்பாண விஜயம் அதிகரிக்கத் தொடங்கியது அவன் ராதாவை காதலிக்கும் விபரம் அப்பாவுக்கு தெரிய வந்தபோது அவர் வானுக்கும் மண்ணுக்குமாக குதித்தார். அண்ணாவும் அவருடன் சேர்ந்து கொண்டான். ராவை சாதியால் குறைந்தவள் என்று அப்பா ஏசிய போது உண்மைக் காரணம் அனுக்குத் தெரிந்திருந்தது. சாதி மட்டும் அப்பாவின் கண்களை உறுத்தவில்லை ராதாவின் ஏழ்மை நிலை கூடத்தான். ஏழை வாத்தியாராக இரவல் வீட்டில் குடியிருக்கும் ராதாவின் அப்பாவிடம் தம் மகளை தவிர சீதனமாக தர ஒன்றுமில்லை என்பதே அவருடைய எதிர்ப்புக்குக் காரணம். ஆனால் அவன் அதற்கெல்லாம் மசிந்து போய்விடவில்லை. வாழ்ந்தால் ராதாவுடன் தான் வாழ்வேன் என்று அடித்துச் சொல்லிவிட்டான். அம்மா மௌனமாக அழுவதையோ

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

## கைவிடமாட்டேன்

காதலி: என்னை நீங்கள் கைவிட மாட்டீங்களே ?

காதலன்: ஓம் உன்னை வேறொருவன் மணவறையில்
கைப்பிடிக்கும் வரை
கைவிடமாட்டேன் ...
என் கண்ணே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

அப்பா சொத்தில் ஒரு சதம்கூட கிடையாது என்று பயமுறுத்துவதையோ அவன் இலட்சியம் செய்யவில்லை. ராதா கூட தனக்காக அவன் தன் குடும்பத்தைப் பகைப்பதை விரும்பவில்லை. தன்னை மறந்து விடும்படி அவள் கேட்டும் அவன் அதற்கு செவிசாய்க்கவில்லை. அதன் பிறகு ராதாவை அவன் பதிவுத் திருமணம் செய்து கொண்டான். அவளையும் அழைத்துக் கொண்டு அவன் தன் பெற்றோரைப் பார்க்கப் போன போது அப்பா அவர்களை உள்ளே வரவிடவில்லை. 'சாதி குறைந்தவளை உள்ளே விட மாட்டேன். என அவனுடைய அண்ணா கூறியது இப்போதும் அவன் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

அதன் பின் அவன் வேலை பார்க்கும் இடங்களெல்லாம் ராதா அவனைத் தொடர்ந்தாள். அவனுடைய அப்பாவும் அம்மாவும் இறந்து போக இவன் மட்டும் சாவீட்டுக்கு போய்விட்டு வந்தான். அப்பாவும் தன் சபதப்படி சொத்தில் ஒரு பங்குகூட இவனுக்கு எழுதாமல் எல்லாவற்றையும் அண்ணன் பெயருக்கு மாற்றிவிட்டிருந்தார். இவனும் அதைப்பற்றி கவலைப்படவில்லை. ராதாவின் அப்பாவும் இறந்தபின் அவனோ ராதாவோ சொந்த ஊரை எட்டிப்பார்க்காமல் தான் இருந்தார்கள்.

அவனுடைய உழைப்பும் ராதாவின் குடும்பம்நடத்தும் பாங்கும் அவனிடம் ஏராளமான பணப்புழக்கத்தை கொடுத்திருந்தன. வீடு நகை என்று ஒவ்வொன்றாக அவர்கள் பெயரில் சேர்ந்து கொண்டிருந்தன. அவன் அப்போது திருகோணமலையில் குடியிருந்தான். அங்கேயே 'செட்டில்' ஆகிவிடலாம் என்றுதான் நினைத்தான்.

இனப்பிரச்சனை பெரிதாக உருவெடுத்தது. இராணுவத்தினர் ராதா உட்பட பல அழகிய பெண்களைப் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கினர். ராதா அதிர்ச்சியாலும் அவமானத்தாலும் நினைவிழந்தாள்.

அவன் ராதாவையும் குழந்தைகளையும் கொண்டு யாழ்ப்பாணத்

சகலவிதமான அழகுசாதனப் பொருட்களையும்
நியாய விலையில் பெற்றுக்கொள்ள

**ஜெயா அழகுசாதன மாளிகை**
177A, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்,

**ஜெயா பென்ஸி ஹவுஸ்**
160, நவீன சந்தை [உட்புறம்] யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாய் : உன் மனைவி பாக்குவெட்டியால் எறிந்து போட்டாள்.

மகன் : உனக்குப் பாக்குவெட்டி எறிந்தது பிழை. எரிகணை எறிந்திருக்க வேணும். நீதான் அவளைச் சல்லடை போட்டுத் தேடித்தந்த சிங்காரநாச்சி.

— சுந்தர்

துக்கு வந்தான் கையிலிருக்கும் நகைகளை விற்று ராதாவுக்கு வைத்தியம் பார்த்தான். பயனில்லை. அந்த பணமும் கரைந்துவிட வேலைக்காக அலையத் தொடங்கினான்.

ராதாவுக்கு சாப்பாடு கொடுத்து முடிந்ததும் இவன் கையலம்பிக் கொண்டு வந்தான். கொடியில் கிடந்த சேட்டையும் காற்சட்டையையும் போட்டுக் கொண்டவன், உடைந்த கண்ணாடியில் சிரமப்பட்டு முகம்பார்த்து தலைசீவிக் கொண்டான். அவனுடைய முகத்தைப் பார்க்க அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. 'எவ்வளவு மாறி விட்டேன்' என்று நினைத்துக் கொண்டான். படிக்கும் காலங்களிலும் சரி, அதன் பின் வேலை பார்க்கும் காலங்களிலும் சரி அவன் அழகானவன் என நண்பர்களும் வேறு பலரும் சொல்லக் கேட்டிருக்கிறான். ராதா கூட குறும்பாக அவனிடம் அவனுடைய அழகைப் பற்றி பிரஸ்தாபித்து இருக்கிறாள். அந்த அழகு இருந்த இடம் தெரியாது போய்விட்டதை எண்ண அவனுக்கு முதலில் வேதனையாக இருந்தது. பிறகு சிரிப்பாகவும் இருந்தது. 'குழந்தைக்கு சுகமில்லை. மருந்து வேண்டக்கூட கையில் காசில்லை இப்படி எத்தனையோ கவலைகள் கிடக்கு இதற்குப்போய் கவலைப் படுகிறேனே' என்று நினைத்துச் சிரித்தான். காலில் செருப்பை மாட்டிக்கொண்டவன் "அனு, நான் போயிற்று வாறன். கதவைப் பூட்டிக் கொண்டு கவனமாக இரு— நான் வர நேரம் செண்டா சாப்பாடு எடுத்து மூடி வச்சிருக்கிறன், நீயும் சாப்பிட்டு அம்மாவுக்கும் குடு— தம்பிய கவனமாய் பார்த்துக் கொள் " அவன் அடுக்கிக் கொண்டு போவதை பொறுமையாகக் கேட்டுத் தலையாட்டிய அனு அவன் கூறி முடித்ததும்" "அப்பா சாப்பிடாமல்போறீங்களே சாப்பிட்டிட்டு போங்களன்" என்றாள். அவனுக்கு ஏனோ வேதனை பீறிட்டு வந்தது. தன்னை கவனிக்கவும் இந்த உலகில் ஒரு ஜீவன் இருக்கிறதே! என்ற நினைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்கு பெருமையைத் தந்தது அவன் மண்டியிட்டு தன் மகளின் அருகே அமர்ந்து, அவளுடைய பிஞ்சுக் கரங்களைப் பற்றி முத்தமிட்டான். அவன் கண்களில் வழிந்த நீர் அனுவின் கரங்களை நனைக்க "அப்பா ஏன் அழுகிறீங்க... அழாதேங்கோ அப்பா" என்றாள் அவள். "நான் ஆம்பிள அழக்குடாது ' என்று அவன் தன்னைக் கட்டுப்படுத்த முயன்று தோற்றுப் போனான். பிறகு மெதுவாக எழுந்து நின்று மகளின் கன்னங்களில் தட்டி 'அப்பாக்கு பசிக்கேல்ல வந்து சாப்பிடுகிறேன்' என்று சொல்லிவிட்டு திரும்பியபோது ஏணையில் இருந்து மெல்லிய அழுகுரல் கேட்டது. திரும்பிபோய் குழந்தையை எடுத்து அது நனைத்து விட்டிருந்த துணியை மாற்றிவிட்டு வெளியேறினான். தான் அகப்பட்டிருப்பது சாதாரண வலையினுள் அல்ல பாசவலையினுள் என்பதை அவன் அப்போது உணர்ந்து கொண்டான்.

நடக்கும் போது செருப்பு இதோ அறுந்துவிடப்போகிறேன் என பயமுறுத்திக் கொண்டே வந்தது. அதுவும் அவனுடன் அவன் வேலைக்கு போகுமிடங்களெல்லாம் அலைகிறதே. அதுதான் களைந்துப் போய் விட்டது என்று நினைத்துக்கொண்டான். வேலை, அது எங்கே கிடைக்கும்? அதைத் தேடுவது போன்ற சிரமமான காரியம் எதுவுமே உலகில் கிடையாது என நினைத்தான் அவன். எங்கு வேலை கேட்டாலும் இல்லையென்றே கையை விரிக்கிறார்கள். வேலை இல்லாமைக்கு நாட்டுப் பிரச்சினையை காரணம் காட்டுகிறார்கள். எந்த நேரம் என்ன நடக்கும் என்ற நிலையில் தொடங்கிய தொழிலை மூடிவிடத் துடிக்கும் நோக்கில் யார்தான் அவனுக்கு வேலை கொடுக்கப் போகிறார்கள். அப்படி வந்தாலும் எத்தனையோ ஆயிரம் 'டிப்போசிட்' கட்ட வேண்டும் என்கிறார்கள் அல்லது சிபாரிசு கேட்கிறார்கள். அவை எவையும் அவனிடம் இல்லாததால் அவன் இன்னமும் வேலைதேடி அலைகிறான். அவனுடைய செருப்புக்கூட சலித்து விட்ட நிலையில் அவன் சலிக்காமல் தீசிகிறான். காலை

சித்ராலயா

★ போட்டோற்றற் பிரதிகள் ★ பாஸ்போட் படங்கள்

★ தேசிய அடையாள அட்டைப்படங்கள் ★ கலர்ப் படங்கள்

★ கறுப்பு வெள்ளைப் புகைப்படங்கள் வேண்டிய அளவுகளில் பெரிதாக்கல் போன்ற தேவைகளுக்கு,

சித்ராலயா

172, ஸ்ரான்லி வீதி, (அருச்சுனா வீதி) யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொல்லமாட்டேன்

மகன் ! என்ரை கலியாண வீட்டுக்கு உங்களுக்குச் சொல்லமாட்டேன்.

தந்தை : ஏன் மகனே ?

மகன் : நீங்க உங்கட கலியாண வீட்டுக்கு சொல்லேல்ல அதுதான்.

தந்தை : ? ? ? ?

— முரளி

எழுந்தால் மாலைமட்டும் வேலை தேடும் படலம்தான் கையில் காசும் இல்லாமல், இது என்ன அலைச்சல் என்ன நரக வாழ்க்கை என்று சில சமயங்களில் நினைப்பதுண்டு. ஏதாவது நஞ்சை வாங்கி குழந்தைகளுக்கும் ராதாவுக்கும். கொடுத்து தானும் குடித்து விடலாமா என்று நினைத்திருக்கிறான்.

கையிலிருக்கும் நகைகளை விற்று ராதாவுக்கு வைத்தியம் பார்த்தான். பயனில்லை. அந்தப் பணமும் கரைந்துவிட வேலைக்காக அலைய வேண்டி இருக்கிறது.

யாழ்ப்பாண ரவுனில் அவன் வந்திறங்கும்போது பத்துமணி இருக்கும். வெய்யில் தலையைத் தாக்க இவன் பாதை ஓரமாக நடக்கத் தொடங்கினான். வயிறும் ஒலமிடத் தொடங்கியது. அனு சொன்னது போல் சாப்பிட்டு விட்டே வந்திருக்கலாம். என்று நினைத்தான் அவனுடைய நண்பன் ஒருவன் வேலை விஷயமாக இவனைச் சந்திக்கச் சொல்லி இருந்தான். அவனைத் தேடித்தான் இவன் போய்க்கொண்டிருந்தான். இவனுடைய நண்பனுக்கு யாழ் பெரியாஸ்பத்திரியில் வேலை. ஆஸ்பத்திரியை நோக்கி நடக்கும் போது ரவுனில் சன நடமாட்டம் குறைவாக இருப்பதை இவன் கவனித்தான்! குண்டுவீச்சு விமானங்கள் எறிகணைத் தாக்குதலுக்குப் பயந்து சனங்கள் டவுன் பக்கம் வருவதில்லை என எண்ணிக் கொண்டான்.

இவனைச் சந்தித்த நண்பன் 'உன்ர வேலை விசயமாக ஒருவரைச் சந்திக்க நேற்று அவரிட வீட்ட போனான். அவர் இல்லை கொழும்புக்கு போட்டாராம் வர ஒருகிழமையாகுமாம்... வந்தபிறகு போய்க் கதைக்கிறன்'. என்றான் இவன் ஏமாற்றத்துடன் எழுந்தான். 'தேத்தண்ணி குடிச்சுட்டுப் போவன்' என்று சொன்ன நண்பனிடம் 'வேண்டாம்' என்று சொல்லி வீட்டு வெளியே வந்தான் குழந்தைக்கு மருந்து வாங்க வேண்டுமென்ற நினைப்பு அப்போதுதான் எழுந்தது அந்த நினைவு அவன் உடலில் ஒரு சோர்வே வரவழைத்தது' 'காசுக்கு என்ன செய்யலாம்? பிரச்சினையைச் சொல்லி இவனிடமே கேட்கலாமா? என்று நினைத்தவன் உடனடியாக அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டான். யாரிடமும் கடன் வாங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியில்லை என்று அவன் எடுத்திருந்த முடிவை மாற்றத் தயாராக இல்லை. ஆஸ்பத்திரி வராந்தாவில் மெதுவாக நடைபயின்ற போது, ஒரு பெண்மணி தலையில் அடித்து அலறுவதைக் கவனித்தான். அவளைச் சூழ ஒரு கூட்டம் நின்று கொண்டிருக்க, ஸ்ரெச்சரில் சின்ன உடம்பு ஒன்று வெள்ளைத் துணியால் போர்த்தப்பட்டு வந்துகொண்டிருந்தது. இவனுக்கு நெஞ்சினுள் வலித்தது. ஒரு கிழமையாகக் காச்சலாம். இன்டைக்கு போட்டுது — மூளைக் 'காய்ச்சல் என்று டாக்டர் சொல்லிப் போட்டார்' பக்கத்தில் நின்ற பெண் யாரிடமோ சொல்லிக் கொண்டிருக்க இவன் விறைத்துப் போனான் காய்ச்சல் மூன்று நாளாக இடைவிடாத காய்ச்சல். ஒருவேளை அவனுக்கும் இப்படியாகி விடுமோ... அதே போல் அசைவற்று போர்வையால் போர்க்கப்பட்டு அவனுடைய மகனை அந்தக் கோலத்தில் நினைத்துப் பார்த்தான். கூடாது என் மகன் இறக்கக் கூடாது... நான் என்ன பாடுபட்டாலும் அவனைக் காப்பாற்ற வேணும்... யாரிடம் கையேந்தினாலும் பரவாயில்லை. என்ரை மகனைக் காப்பாற்ற வேணும். அவன் வெறிபிடித்தவன் போல் தனக்குள்ளே சொல்லிக்கொண்டு ஆஸ்பத்திரி வராந்தாவில் வேகமாக நடந்தான். அவன் கண்கள் எதேச்சையாக எதிரே தெரிந்த கருத்தடை விளம்பரத்தை நோக்கின. அவன் தொடர்ந்து படிக்கவில்லை வேகமாக நடந்தான்.

அவன் கையில் இப்போது படபடக்கும் நோட்டுக்கள். சோர்வாக இருந்தது. கண்கள் வேறு இருட்டிக் கொண்டு வந்தன. அவன் சிரமப்பட்டுத் நடந்தான். மருந்துக் கடையில் மருந்து சிட்டைகொடுத்து மருந்து வாங்கிக் கொண்டான். மருந்து கையில் கிடைத்ததும் ஆறுதல் பெருமூச்சொன்று அவனிடமிருந்து வெளிப்பட்டது. குழந்தைக்கு பால்மாவும் வாங்கிக் கொண்டு நடக்கத் தொடங்கினான். சிறிது தூரம் நடந்தவன், எல்லோரும் அங்குமிங்கும் ஓடுவதையும் கடைகள் அவசரமாக மூடப்படுவதையும் கவனித்தான். வாகனங்கள்

Bata D.S.I.

பாதணிகளுக்கு

அகிலன் பாதணி நிலையம்

121/1 பெரியகடை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னடா அர்த்தம் ?

பாபு: டேய் சுரேன்! முற்பகல் செய்யின் பிற்பகல் விளை யும் இதற்கு என்னடா அர்த்தம் ?

சுரேன்: முற்பகல் ஷேவிங் செய் தால் பிற்பகல் தாடி விளையும் என்று அர்த் தம்.

— மோகன்

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

இரைச்சலுடன் விரைகின்றன. இப் போது தான் அவனுக்கும் 'அந்த ஓசை கேட்டது' ஆமாம் நகரையே கலக்க வைக்கு அந்த இயந்திர பறவைகளின் ஓசை உலங்கு வானூர்தி குண்டுவீச்சு விமானம் இரண்டுமே சோடியாக ஒலிஎழுப்பு கின்றன அவனும் ஓட ஆரம்பிக் கிறான். கால்கள் நிலத்தில் பதிந்து பதிந்து எழுகின்றன. பின்னங்கால்கள் பிடரியில் அடிக்க ஓடுகிறான். காதைசெவிடு படவைக்கும் இரைச்சல்கள், பயங்கர ஓசைகள். உடலைஉரசிக் கொண்டு செல்லும் வேட்டுக்கள். எந்த நேரமும் எந்தக்குண்டும் உயிரைக் குடிக்கலாம் என நினைத்தவன் வேகத்தை அதிகப் படுத்தினான். அவனது ஓட்டத் துக்கு காரணம் மரண பயம் அல்ல. ஆனால் தன்னுயிர்போய் விட்டால் தன்னை நம்பியிருக்கும் அந்த மூன்று ஜீவன்கள்... குழந் தைகளின் நிலையே அவனுக்கு உயிர் ஆசையை ஆவேசத்தைக் கொடுத்தன அவர்களை எப்படி யாவது காப்பாற்ற வேண்டு மென்ற வெறி அவனுள் பிறந்தது மாறி மாறி வேட்டுக்களும் குண்டுகளின் ஓசைகளும் கேட் டுக் கொண்டிருந்தன. எங்கும் புகை ; மரண ஓலம் காலடியில் இரத்த வெள்ளம் இவன் ஓடும் போது தான் வாங்கிவந்த மருந்து போத்தலை மருந்து சிந்தா வண்ணம் கவனமாக பிடித்துக் கொண்டு களைப்புடன் மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க ஓடினான். கால் கள் பின்ன தொடங்கின. அந்த நேரம் பார்த்து உயிரை விடக் காத்திருந்த செருப்பு அறுந்து விட, அதை எதிர்பார்க்காத அவன் நிலைதடுமாறி குப்புற விழுந்தான். மீண்டும் எழ முயற்சித்த போது... தாழப்பறந்து வந்த விமானங் களின் இரைச்சல் பெரிதாகிக் கொண்டே வந்தது. அவன் முது கிலும் பின்னந்தலையிலும் ஏதோ ஒன்று தாக்க .. அவன் மீண்டும் படுத்துக் கொண்டான். ஈரப்பிசு பிசுப்பு. அவனுக்கு நினைவுகள் சிறிது சிறிதாக ஸ்தம்பிக்கத் தொடங்கிய போதும்... அவன் கண் முன் அவனுடைய மூன்று குழந்தைகளும் பரிதாபமாக சுழன் றன. கண்களிலிருந்து வழிந்த நீர் அவனுடைய இரத்தத்துடன் கலக்கத் தொடங்கியது. அந்த நிலையிலும் அவன் கைகள் மருந்து போத்தலை இறுக்கமாக பற்றியிருந்தன. அவன் மௌனித் தான். □

---

தமிழிலே சுயசரிதை பாடிய முத லாவது கவிஞர் 'மகாகவி' சுப்பிர மணிய பாரதியார் ஆவார்.

துரை - பிரஷாந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேனா நண்பர்கள்

ஏராளமான கடிதங்கள் வந்தன, நீங்களும் [1] முழுப்பெயர் [2] வயது [3] முகவரி [4] பொழுது போக்குகள் போன்ற விபரங்களை எழுதிப் பேனா - நண்பர்கள் 44/6, சங்கிலியன் வீதி, நல்லூர் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். ஐந்து ரூபா பெறுமதியான முத்திரையையும் தவறாது இணையுங்கள்.

1. க. கஜரூபன், 42/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம் வயது: 16
2. அ. சண்முகதாஸ், இராஜவீதி, கோப்பாய் வடக்கு, கோப்பாய் வயது: 15
3. க. சிறாஜ்குமார், 59, குருசோ வீதி, சுண்டுக்குளி. வயது: 19
4. சு. குணேஸ்வரன், கெருடாவில் தெற்கு, தொண்டமனாறு வயது: 20
5. சி. பிரியதர்ஷினி, 842, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் வயது 16
6. ம. அருள்குமரன், 1-ம் ஒழுங்கை, பொற்பதி றோட், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். வயது: 14
7. த. தர்ஷிக்கா, அராலி வடக்கு, வட்டுக்கோட்டை. வயது: 13

சுவைமிக்க சைவ உணவு வகைகளுக்கு

ஸ்ரீ தாமோதரா விலாஸ்

239, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிருந்தாவுடன் ஒரு பேட்டி



செல்வன் காந்தகுமார் பிருந்தாபன் 1982-ம் ஆண்டு ஐப்பசி மாதம் முதலாம் திகதி யாழ்ப்பாணத்தில் பிறந்தார் இவர் தனது எட்டாவது வயதுவரை மலேசியாவில் வசித்தார் பாடசாலை செல்லாது பெற்றோரையே குருவாகக் கொண்டு கல்வி கற்றார். பெற்றோரின் படங்களை வணங்கும் இவர் அவர்களது ஆசிகளைப் பெற, 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பதற்கிணங்க அவர்களை வணங்கும் கொள்கையில் பிரியம் உடையவர். இவர் சென் ஜோன் பொஸ்கோ மாணவன். பிருந்தாபன் 1992-ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 199 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கையிலும் முதலாம் இடத்தைப் பெற்றார். இதனால் பலரதும் பாராட்டைப் பெற்றார்.

★ மின்சாரம் முதல் கல்விக்கான எந்த வாய்ப்பான நிலையும் இல்லாத இந்த அசாதாரண சூழ்நிலையில் உங்களுக்கு நன்றாகப் படிக்க வேண்டுமென்ற ஆவல் எவ்வாறு ஏற்பட்டது?

என்னுடைய படிப்புக்கான சூழ்நிலையை அம்மா ஏற்படுத்தி ஊக்கமளித்தார். அறிவியல் மேதைகளின் வாழ்க்கை என்னை வழிப்படுத்தியது.

★ புலமைப் பரிசில் பரீட்சையில் நீங்கள் எதிர்பார்த்தது போன்று இலகுவாய் அமைந்ததா?

எதிர்பார்த்தை விட இலகுவாய் அமைந்தது.

★ நீங்கள் எந்தப் பாடசாலையில் மேற்படிப்பைத் தொடர விரும்புகிறீர்கள்? உங்களுடைய எதிர்காலம் பற்றிய சிந்தனை என்ன?

பரியோவான் கல்லூரியில் கல்வி பயின்று எங்கள் மக்களுக்கு பணியாற்றும் மருத்துவனாக அன்றி விஞ்ஞானியாக வர வேண்டும் என எண்ணுகிறேன்.

★ "கல்வியறிவு" என்பது இறைவன் கொடையா? முயற்சியின் பயனா?

"ஆள் பாதி ஆடை பாதி" என்பார்களே அதுபோலவே இறைவன் பாதி முயற்சி பாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ கல்வி என்பதை நீங்கள் சுமையாக நினைக்கின்றீர்களா?

இல்லை. பொழுதுபோக்காகவே புத்தகங்களை வாசிக்கின்றேன். இவ்வாறு வாசிப்பது எனது அறிவு வளர்ச்சிக்கும் மொழி வளர்ச்சிக்கும் மொழி ஆற்றலை வளர்க்கவும் உதவியது.

★ புலமைப் பரிசில் பரீட்சை எடுக்க விரும்புபவர்களுக்கு நீங்கள் கூற விரும்புவது என்ன?

கவனயீனப் பிழைகளைத் தவிர்த்துக் கொள்வதுடன், குறித்த நேரத்தில் விடையளிப்பதற்குப் போதிய பயிற்சியைப் பெற வேண்டும்.



☐ பெண்கள் ஆண்களுக்கு சளைத்தவர்கள் அல்ல என்பதை யாழ் / சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி செல்வி அகல்யா செகராசா நிரூபித்து விட்டார். இவர் அகில இலங்கையில் இரண்டாம் இடம் வகிக்கும் மற்றவர்.

வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்ட அகல்யா வயதுக்கு மீறிய அறிவு விருத்தியுடையவர். எதிர்காலத்தில் ஆங்கில விரிவுரையாளராக வர வேண்டும் என்று விரும்புகிறார் இவர்.



☐ இவர் யாழ் / ஆனைப்பந்தி மெ. மி. வித்தியாலய மாணவன் அண்மையில் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் 197 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கையில் இரண்டாம் இடம் வகிக்கும் இருவரில் ஒருவர் செல்வன் சாந்தகுமார் மோகனஜீவ் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றுக்கும் செல்லாது கல்வி கற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவையான புதினங்கள்

## அதிசயமான ஊற்று

பிரான்சில் உள்ள குகை ஒன்றில் 36 நிமிடங்கள் 36 செக்கன்கள் நீர் சுரக்கும். அடுத்த 32 நிமிடங்கள் 30 செக்கன்கள் நீர் சுரக்காது. இப்படியாக மாறி மாறி பல நூற்றாண்டுகளாக நீர் சுரந்து கொண்டிருக்கின்றது.

## அதிசயப் பௌர்ணமி

1866 ஆம் ஆண்டு தையிலும், பங்குனியிலும் இரண்டு தடவை பௌர்ணமிகள் வந்தன. மாசியில் பௌர்ணமியே வரவில்லை. இம்மாதிரிக் கிரகநிலை பல லட்சம் ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் வருமாம்.

## மாணவனின் சாதனை

செர்பியா நாட்டைச் சேர்ந்த மாணவன் ஒருவன் அந்நாட்டுக்கு வந்திருந்த அவுஸ்திரிய அரசர் பெர்டினண்ட்டையும் அவரது மனைவியையும் 1914. 06. 28 அன்று சுட்டுக் கொண்டான். இதுவே முதலாம் உலகப் போர் தொடங்க உடனடி காரணமானது.

## மரப்பால்

தென் அமெரிக்காவில் சில காடுகளில் ஒரு வகை மரம் உள்ளது. அம்மரங்களில் துளை போட்டால் பசும் பால் வருகிறது. அப்பாலை அங்குள்ள மக்கள் விரும்பி அருந்துகிறார்கள்.

## பச்சோந்தி

பச்சோந்தி' தனது ஒரு கண்ணால் ஓர் இடத்தையும் மற்றொரு கண்ணால் வேறொரு இடத்தையும் பார்க்கக் கூடியது.

## ஏழும் ஏழும்

சூரியனுடைய ரதத்தில் ஏழு குதிரைகள் பூட்டப்பட்டிருக்கும் என்று புராணங்களில் கூறப்படுகின்றது. அதையொட்டியே ஏழு நாட்களையும் ஏற்படுத்தியதாக நம்பப்படுகின்றது.

## ஏன் அப்படி ?

சனி, ஞாயிறு வார இறுதி நாட்களாக வழங்கப்படுகின்றன. ஆனால், ஞாயிற்றுக்கிழமையில் இருந்துதான் நாட்களைக் கூறுகிறோம். உதாரணமாக, Sunday, Monday ......... ஏன் அப்படி ?

தொகுப்பு : கவிவண்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போட்டி முடிவுகள்

## ✱ கவிதைப் போட்டி :

ரூபா 100.00 பெறுமதியான பரிசு பெறுபவர் 'தமிழின்பன் இ. கானமுடையன் C/o / பா Dr. சி. இராசலிங்கம் வராம்பற்றை, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

பாராட்டுப்பெறும் இளங்கவிஞர்கள்:- பு. திலீப்காந், ராஜ. புலேந்திரன், லோ. சிறிதரன், பு செந்தில்ரூபன், பே.ரிசிகேசன், கே. சர்வானந்தன்.

## ✱ உயிரினங்களின் பெயரைக் கொண்டுள்ள ஊர்கள் போட்டி :

மொத்தம் 112 பெயர்களை எழுதி பரிசு பெறுபவர் செல்வி சுபோதினி யோகராஜா 82/3 கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். பரிசுப் பெறுமதி : ரூபா 55.00

## ✱ பழமொழிப் பொருட்போட்டி :

மிகச்சரியான விடை எழுதிப் பரிசு பெறுபவர் : பு. நந்தினி, 122/12 A, பருத்துறை வீதி, ஆனைப்பந்தி. பரிசுப்பெறுமதி : ரூபா. 55.00

## ✱ ஊர் பெயர்களுக்கான காரணம் :

எழுதிப் பரிசுபெறுபவர் செல்வி சுகிதா நாகமணி 7-ம் வட்டாரம், சங்கானை பரிசுப் பெறுமதி : ரூபா 55.00

பரிசில்கள் யாவும் வெகு விரைவில் அனுப்பிவைக்கப்படும். பரிசுக்குரியவர்கள் இலவசமாக 'மாற்றம்' மக்கள் சஞ்சிகையின் ஆண்டுச் சந்தாகாரராக சேர்த்துக்கொள்ளப்படுவீர்கள்.

போட்களில் வாசகர்களின் ஊக்கம் கண்டு மகிழ்கின்றோம்.

ஆ – ர்.

---

## அட்டைப்படக் கவிதைப் போட்டி

அட்டைப் படத்தைப் பார்க்க என்ன தோன்றுகின்றது என்பதை கவிதையாக எழுதி அனுப்புங்கள். சிறந்த கவிதைக்கு ரூபா 100.00 பரிசு வழங்கப்படும்.

---

அன்பளிப்பு :

**வீனஸ் வர்த்தகக் களஞ்சியம்**

358, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊருக்கொரு சுந்தரி

கொண்டாட்டங்கள், திருவிழாக்கள் என்றால் சுந்தரிக்கு ஒரே குஷிதான். ஊரிலே திருமணவீடொன்றுக்கு சுந்தரிக்கு அழைப்புக்கிடைத்திருந்தது. ஒரு வாரத்துக்கு முதலே திருமணவீட்டுக்குச் செல்வதற்கான ஆயத்தங்களைச் செய்திருந்தாள் சுந்தரி.

வயது அறுபதானாலும் அவளை அலங்கரித்த பொருட்கள் கொஞ்சநஞ்சமல்ல. கண்ணுக்கு மையும், சொண்டுக்கு சிவப்பும், முகத்துக்கு கிறீமும், நரைத்தமயிருக்கு டையும், கழுத்துமுட்ட நகைகளும், கைநிறைய வளையலும், காலுக்குகொலுசும், குதிச்செருப்பும் இன்னும் எத்தனை எத்தனையோ அலங்காரங்களைத் தாங்கியவாறு திருமணவீட்டின் வாசலில்க்கட்டிக்கிடந்த வாழைக்குலைகளை வாயூறப்பார்த்து வீட்டு அலங்கரிக்கப்பட்ட பந்தலினூடே காஞ்சிபுரச்சேலையை மடிப்புக் குலையாமல் ஒரு கையால் தூக்கிக்கொண்டு மறுகையில் 'கான்பாக்கை' பிடித்தவாறு தாரா நடைநடந்து வந்தாள் சுந்தரி.

மணமக்கள் இருப்பதைக் கண்டு ஒருகணம் கண்ணூறு படப்பார்த்து விட்டு மூக்கைச்சுளித்தவாறே பெண்கள் அலட்டிக்கொண்டிருந்த கூட்டமொன்றுக்கு நடுவில்ப்போய் உட்கார்ந்து, தனது வழமையான பாணியில் ஊர்ச்சனங்களை விமர்சித்தாள். பின்னர் பலகாரங்கள் பரிமாறப்பட அதை எடுத்து தின்றுவிட்டு மணமக்களைப் பற்றி கூறத்தொடங்கினாள் இவளுக்கு இருபத்தி நான்கு வயதாகேல்லை. அதுக்கிடேல புருஷன் தேவைப்பட்டதோ, ஆளின்ரை அளவில இவளுக்கு ஒரு கலியாணம் தாய் மாதிரி சதிராடி மாப்பிள்ளைபிடிச்சிட்டாள் மாப்பிளையைப் பார் அவருக்கும் இருபத்திநான்கு வயதுதானாம் ஒழுங்கா மீசை கூட முளைக்கேல்லை அதுக்கிடேல கலியாணம். இவன் என்ன சாதியோ, சமயமோ ஆருக்குத்தெரியும். உதுக்குத்தான் ஒழுங்கான வளர்ப்புத்தேவை எண்டு சொல்லுறது. என்ர மகளும் கம்பஸிலதானே படிச்சவள் ஒரு பி. எஸ் சி ரீச்சர் இப்ப அவளுக்கு நாற்பத்தைந்து வயது இன்னும் ஒரு ஆம்பிளையைக்கூட நிமிர்ந்து பார்த்துக் கதைக்கமாட்டாள். அவ்வளவு ஒழுங்கானவள். இவளைப்போல என்ரை பிள்ளை என்ன சதிர்க்காரியே மாப்பிளை பிடிக்க. இப்பிடி மாப்பிளை பிடிக்கிறதெண்டால் எப்பவோ அவள் பிடிச்சிருப்பாள். ஒழுக்கமாக இருந்ததால இப்பவும் குமரியாகத்தான் இருக்கிறாள். உதுகளைப்போல நாங்கள் என்ன குறைஞ்சாக்களே...' என்று பெருமிதத்தோடு கைக்குட்டையால் முகத்தைத்துடைத்தவாறே பேஸைத்திறந்து கண்ணாடியில் முகத்தைப் பார்த்தாள் அந்த ஊர் சுந்தரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் அப்படி?

● மௌனிகா

பாஷையூர் அந்தோனியார் கோவில் முன்றல்; நெறி பிறழா கிறிஸ்தவர்கள் பிரார்த்தனைக்காகக் கூடுகிறார்கள்; நேரம் பி. ப 5.00 மணி. பூசைக்குரிய நேரம்; கோவில் மணி அடித்துக் கொள்கிறது; அடியவர்கள் முழந்தாழிட்டு அமர்கிறார்கள்.

அங்கு சில சிறுசுகள் குருசுகளுடன் அவர் இவரை அண்டி நிற்கிறார்கள். அங்கொரு புறமாக சில வளர்ந்த மனிதர்கள் காலை நீட்டி; மடித்து (அ)சௌகரியமாக அமர்ந்திருக்கிறார்கள்.

☐ ☐ ☐

அந்த சின்னஞ்சிறுசுகள் அவர் இவரை அண்டி ஏன் ஆண்டியானார்கள்?

வளர்ந்த மாமனிதர்கள் ஏன் (அ)சௌகரியமாக அமர்ந்தார்கள்

ஏன் அவர்களால் முழந்தாழிட்டு அமரமுடியாதா?

'இல்லை அவர்கள் ஆலய வழிபாட்டில் நம்பிக்கை இழந்தவர்கள்.'

ஏன் அவர்கள் அவ்வாறாக அங்கு உலாவி வருகிறார்கள்? ''அவர்கள் அடியவர் பால் கொண்ட நம்பிக்கையாற்றான் உலாவி வருகிறார்கள்.'

ஏன் அவர்களுக்கு அந்நிலை?

''முன்றெழுத்துப்பேய் அவர்களிடம் இல்லாததால் சமூகப் பிசாசு அவர்களைப் பிடித்து விரட்டியதால் அவர்கள் அந்நிலைக்கு உள்ளானர்கள்.'

அம்மனிதர்களிடம் பணப்பேய் இருந்தால் தேடி வருபவர்களெல்லாம் இன்று ஓடி விடு அல்லது 'நாய் கடிக்கும்' என்று குரைக்கிறார்கள். அவர்கள் முன் இவர்கள் பிச்சைக்காரர்கள்.'

---

☐ எலக்ட்ரானிக் கைக்கடிகாரத்தை சுவிட்சலாந்தைச் சேர்ந்த 'பெர்னாட் கோலே' என்பவர் 1969 இல் கண்டு பிடித்தார்.

☐ உலகிலேயே அதிக அளவில் உற்பத்தியாகும் காய்கறிகளில் உருளைக்கிழங்கு முதல் இடத்தையும் தக்காளி இரண்டாம் இடத்தையும் பெறுகின்றது.

தொகுப்பு: கி. செல்மர் எமில்

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர் சிவா——

● உரும்பையூர் முரளி

ஈழத் தமிழர்களின் முதுகெலும்பாக விளங்கும் கல்வியின் கண்ணைத்தரும் அறிஞர்கள் ஆசிரியர்களில் 'புலவர்சிவா' குறிப்பிடத் தக்கவர்.

புலவர் 1948-ம் ஆண்டு ஆடித் திங்கள் இருபதாம் நாள் கரவெட்டியில் பிறந்தார். பெற்றோர் இவருக்கு இட்ட நாமம் 'சிவஞான சுந்தரம்' என்பதாகும். இவர் கரவை. மாணிக்கவாசகர் வித்தியாலயத்திலும், விக்னேஸ்வராக் கல்லூரியிலும் கல்வி கற்றார்.

இலக்கியத்துறையில் இளையதிலேயே ஆர்வங்கொண்ட சிவா பல கவிதை கட்டுரைகளை எழுதியுள்ளார். 1972இல் நடாத்தப்பட்ட சிறப்புநிலைக் கட்டுரைத் தேர்வில் அகில இலங்கையில் முதலாம் இடத்தைப் பெற்ற புலவர் பல நாடகங்களையும் எழுதி நடித்துள்ளார்.

புலவர் 1974இல் தமது ஆசிரியப்பணியை கரவை. விக்னேஸ்வராக் கல்லூரியில் ஆரம்பித்தார்.

'கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் படியளக்கும் இறைவன் பூவுலகில் ஒவ்வொரு உயிருக்கும் ஏதோ ஒரு வகையில் உறுப்புக்களின் அசைவாட்டத்தை குறைத்தெடுப்பது வழமையாகும்' இந்நியதிக்கோ என்னவோ 1983 இல் கண்பார்வையை இழந்தார்.

'சங்கு சுட்டாலும் வெண்மை தரும்' என்பது போல புலவர் தனது ஆசிரியப் பணியைத் தொடர்ந்தார். இவரது பணிகளை கௌரவிக்கு முகமாக 'புலவர்' பட்டம் சூட்டப்பட்டார்.

அன்பு செலுத்துவதில் தாயைப் போன்றும் கண்டிப்பதில் தந்தையைப்போன்றும் கற்பித்தலில் நல் ஆசானாகவும் இருந்து மாணவர்களை வழிநடத்தும் புலவர் இன்று தனது நாற்பத்தைந்தாவதுவயதில் கொக்குவில் கோணாவளையொழுங்கையில் தனிமையில் வாழ்கிறார்.

## விலங்கினங்களின் நிறங்கள்

| | | |
|---|---|---|
| காண்டாமிருகம் | — | சாம்பல், கருநிறங்கொண்டது |
| காட்டுப்பன்றி | — | சாம்பல், கருநிறங்கொண்டது |
| ஆண்குயில் | — | கறுப்பு |
| பெண்குயில் | — | கறுப்பும் வெள்ளையும் |
| பென்குயின் | — | கறுப்பும் வெள்ளையும் |
| கரிக்குருவி | — | கறுப்பும் சிறிது வெள்ளையும் |

டானியல் ஜேசன், ஜெ.

(மாற்றம், பாதை : 1 இல் விலங்கினங்களின் நிறங்கள் என்ற பகுதியில் காணப்பட்ட குறைபாடுகளின் திருத்தம்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் மன்றம் அறிமுகப்படுத்தும்

இந்த ஆண்டுக்கான

## தேசாபிமானி யார்?

நீங்கள் செய்ய வேண்டியது இதுதான். இன்றைய போர்க்கால சூழ்நிலையில் பொதுநலனையே கருத்திற் கொண்டு மக்களுக்குப் பணியாற்றுகின்ற மனிதன் யார்? அவர் ஆற்றும் பணி என்ன? போன்ற விபரங்களை அனுப்பி வையுங்கள்.

நடைபெறவிருக்கும் நான்கு சுற்றுகளிலும் அதிகப்படியான ஆதரவுச் சீட்டுக்களைப் பெறுபவர் '1993-ம் ஆண்டுக்கான தேசாபிமானி'யாகக் கௌரவிக்கப்படுவார்.

போட்டி விதிகள் :

1. போட்டிகள் ஒவ்வொரு காலாண்டுக்குமாக நான்கு சுற்றுகள் நடைபெறும்.
2. 'மாற்றம்' சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும் படிவங்கள் நிரப்பி அனுப்ப வேண்டும்.
3. ஒவ்வொரு சுற்றிலும் மூன்று வாசகர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும். பரிசுக்குரியவர்கள் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவார்கள்.
4. படிவங்களை 10-03-1993 க்கு முன் 44/6, சங்கிலியன் வீதி, நல்லூர் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
5. முதலாவது சுற்று முடிவுகள் அடுத்த 'மாற்றம்' இதழில் பிரசுரிக்கப்படும்.
6. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. எந்தவிதமான கடிதத் தொடர்புகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

---

போட்டி இல. 01

### ஆதரவுச் சீட்டு - 01

உங்கள் பெயர் : ..................................................

முகவரி : ..................................................

..................................................

தேசாபிமானியின் பெயர் : ..................................................

முகவரி : ..................................................

என்ன காரணங்களுக்காக அவரைத் தேசாபிமானியாகத் தெரிவு செய்கிறீர்? குறைந்தது ஐந்து காரணங்கள் எழுதுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுருட்டியின் பதில்கள்

செ. குணாளன், கு. ஸ்கந்தராஜ் யாழ். இந்துக்கல்லூரி

- [ ] செந்தமிழ், பைந்தமிழ், தேன்தமிழ் எனப் பிரித்துரைத்த மடையர்கள் யார்?

மடையர்களில்லை. புறநானூறு கண்ட புலவர்கள்.

சி. சத்தியா, மானிப்பாய்

- [ ] சுருட்டியாரே! உமக்கு என்ன வயது?

இவ் விலை கூட்டின் இருமுறை அவ்வாண்டு அவ்வயது

ம. பிரியா, ஆனைக்கோட்டை

- [ ] பாவையர் நாம் பாவிகளா?

இல்லை. அப் ...பாவிகள்

த. சுதா, பருத்தித்துறை

- [ ] 'பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க !' என வாழ்த்தினீரே! அது என்ன பதினாறு?

புகழ், கல்வி, வீரம், வெற்றி, நன்மக்கட்பேறு, துணிவு, செல்வம், தானியம், சுகம், போகம், அறிவு, அழகு, பெருமை, நல்ஊ உடனலம், நீண்ட ஆயுள் என்னும் பதினாறு பேறுகள்

த செல்வி, திருநகர்

- [ ] பேயைப் பார்க்க வேண்டும் என்ன செய்யலாம்?

கண்ணாடியைப் பார்க்கலாம்

---


○ விசேஷமாக வெளிநாட்டில் பிறந்தவர்களுக்கான சாதகக் குறிப்புகள் பலனுடன் கணித்துக்கொள்ள

○ தரமான றபர் சீல்கள் செய்துகொள்ள

○ பழைய புதிய புத்தகங்கள் நியாய விலையில் பெற்றுக்கொள்ள

T. V. பாலா

புத்தகசாலை & சோதிட நிலையம்

கே. கே. எஸ் வீதி, (இணுவில் மத்திய கல்லூரி முன்பாக) இணுவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் கடிதம்

குறைந்த விலையில் கூடிய பெறுமதியான 'மாற்றம்' தொடர்ந்து வெளிவருவதை விரும்புகிறேன்.

க. பகீரதன் யா / கனகரத்தினம் ம. ம. வித்தியாலயம்.

நடைமுறை விடயங்கள் பலவற்றைக் கொண்ட மாற்றத்தில் அறிவை விருத்தி செய்யும் போட்டிகளும் அடங்கியுள்ளன.

அ. சண்முகதாஸ் கொக்குவில் இந்துக்கல்லூரி.

குறுக்கெழுத்துப் போட்டிக்கு சஞ்சிகையில் உள்ள பெட்டியை வெட்டாமல் கீறி அனுப்புவதாக இருந்தால் நல்லது

லோ. சிறிதரன் யாழ்ப்பாணம்.

''அந்த நூறுநாட்கள்'' என்ற கட்டுரையின் மிகுதியை வாசிக்க ஆவலாய் உள்ளேன்.

பொ. ஜெயந்தன் யா / இந்துக்கல்லூரி

ரவிவர்மனின் 'கானல்வரி' என்ற சிறுகதை நன்றாக இருந்தது.

மோ. கமல்தாஸ் கஸ்தூரியார் வீதி

பத்திரிகைத் தாளுக்கு தட்டுப்பாடு நிலவும் வேளையில் 'மாற்றம்' வெளிவந்ததை இட்டு மகிழ்கின்றேன்.

கி செல்மர் எமில் ஊர்காவற்துறை

'ஹலி' யின் வால்வெள்ளி எனது பொது அறிவுக்குத் தீனி போட்டது.

வல்லை பா. பாலேந்திரன்


முன்னணி ஆசிரியர்களின் ஏகோபித்த
முயற்சியினால் மாணவர்களின்
எதிர்காலத்தை ஒளிமயமாக்கும் . . .

எவரெஸ்ற் கல்வி நிலையம்

இணுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி : 02




பெயர் : ..............................

முகவரி : ..............................

..............................

## இடமிருந்து வலம்

01. ஸ்ரீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த தமிழர்.
05 அவுஸ்திரேலியாவின் தனித்துவமான விலங்கு
07. செல்வத்தை இவ்வாறும் கூறுவர்.
08. இது உண்ணக் கைக்கூலி வேண்டுமோ?
10. புலி பசித்தாலும் இதை உண்ணாது.
12. போர், வேள்வி என்பன நடக்கும் இடம்.
13. ஆத்திரக்காரனுக்கு இது மத்திமம்.
14. குரங்கினைக் குறிக்கும் ஒரு சொல்.

## மேலிருந்து கீழ்

01. செந்தன்மை பூண்டு ஒழுகுவோரைக்குறிக்கும். இது ஒரு வர்ணக் காரர்களுக்கு வழங்கப்படும் பெயர்.
02 இடியின் அறிகுறி சத்தமல்ல.
03. தாம் இறக்கும் நேரத்தை அறிந்த தற்கொடையாளி.
04. இராமனுக்கு இலக்குமணன் இன்னமுறை என்பர்
06. உயிர்களிடத்தில் செல்லுகின்ற ஒரு வகை அருள்.
08 தச்சு வேலை செய்பவரையும் இவ்வாறு கூறுவர்.
09. குருவிச்சை போல் நன்மை தருபவருக்கே தீமை செய்து வாழ்பவரை இவ்வாறு அழைப்பர்.
11. விதியை இது வெல்லும் என்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப்போட்டி : 01 முடிவுகள்

பரிசுபெறுபவர் :-

செல்வி இ. கலாவதி யா / வேம்படி மகளிர் கல்லூரி

பரிசுத்தொகை :- ரூபா 100.00

பாராட்டுப் பெறுபவர்கள் :-

(1) செல்வி ந. தேவா 30/13, அத்தியடி குறுக்குவீதி (2) நா. தரணிதரன் யா. இ. க. (3) திருமதி ம. ஜெயராணி கோப்பாய் (6) வே. வேலவன் யா. இ. க. (4) சு. நடனகுமாரன் கொக்குவில் மேற்கு (5) த. பூலிதயான் யா / கனகரட்ணம் ம ம. வித்தியாலயம் (6) ம. பிரேமலதா 1-ம் வட்டாரம், மண்டைதீவு. (7) நா. பிரியதர்ஷனி யா / திருக்குடும்பக் கன்னியர் மடம். (8) து. பிரஷாந்தன், யா. இ க. (9) கண. ஜீவகாருண்யம் 187, கஸ்தூரியார் வீதி, (10) இராமதி கந்தசாமி கல்வியங்காடு (11) க. ஜெகதீஸ்வரி இலக்கணவத்தை, உடுப்பிட்டி (12) கா. தாரகா, சங்குவேலி (13) வி. கௌரிபால் உரும்பிராய்.

குறுக்கெழுத்துப்போட்டியில் சில தவறுகள் இருந்தும் வாசகர்கள் சரியான விடைகள் அனுப்பியிருந்தார்கள். பரிசுக்குரியவர் அதிட்டம் பார்க்கும் முறையில் தெரியப்பட்டார்.

---

## ஆண்டுச் சந்தா படிவம்

உமது பெயர் :..........................................................................

முகவரி : ..........................................................................

சஞ்சிகை அனுப்ப வேண்டியவர் பெயர் :

..........................................................................

முகவரி : ..........................................................................

..........................................................................

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

முக்கிய குறிப்பு : 'மாற்றம்' நான்கு இதழ்கள் அனுப்பிவைக்கப்படும். சந்தாத் தொகை ரூபா 35.00. பணத்தினை காசோலையாகவோ காசுக் கட்டளையாகவோ அனுப்பிவைக்கலாம்.

பணம் பெறுபவர் பெயர் : வே. நவமோகன்

முகவரி : 'பொற்கமலதேவி வாசா', புதிய செங்குந்த வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

உப தபாற்கந்தோர் : நல்லூர்

---

இச் சஞ்சிகை தமிழ்த்தாய் மன்றத்துக்காக புதிய செங்குந்த வீதியில் உள்ள பொற்கமலதேவி பதிப்பகத்தினால் நல்லூர், ஆடியபாதம் வீதியில் உள்ள முல்லை அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் நகரில்

- பாடசாலை உபகரணங்கள்
- அலுவலக உபகரணங்கள்
- பாட நூல்கள்

முதலியவற்றை மலிவு விலையில்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை

235, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

'மாற்றம்'
மக்களை மாற்ற
எமது ஆசிகள்

லிங்கம் கிறீம் ஹவுஸ்

52, மணிக்கூட்டுகோபுர வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்துணவுக்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org